# செம்மணி

*நிலம் 3 துகள் 121 வள்ளுவர் ஆண்டு 2052, 12 - 18 கார்த்திகை 2022 வாரமலர் பக்கங்கள் 33*



# அரசுடன் பேசத் தயார் கூட்டமைப்பு அறிவிப்பு

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் அரசுடன் பேசுவதற்குத் தயார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் வடக்கு கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அடுத்த வாரம் பேச்சைத் தொடங்கவுள்ளார் என்று அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ள நிலையில் சுமந்திரன் இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்

பக்கம் 04

**ராஜீவ் கொலை வழக்கில் தண்டனை முடிந்து**

# விடுதலையான 5 பேரும் இன்று வெளியே வருவர்

## *அவர்களில் மூவர் இலங்கையர்கள்*

இந்தியாவின் முன்னாள் தலைமை அமைச்சரான ராஜீவ் காந்தி படுகொலையில் நீதிமன்றத்தால் தண்டனை விதிக்கப்பட்டு 30 ஆண்டுகளாகச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த இலங்கையைச் சேர்ந்த மூவர் மற்றும் நளினி உள்ளிட்ட 5 பேர் இன்று சிறையிலிருந்து விடுதலை செய்யப்படவுள்ளனர்.

இவர்களில் நளினி மற்றும் ரவிச்சந்திரன் ஆகியோர் ஏற்கனவே அனுமதி பெற்று அவர்களது வீடுகளிலேயே உள்ளனர். அவர்கள் தத்தம் சிறைகளுக்கு இன்று திரும்பியதும் விடுதலை

பக்கம் 03




# மகனின் விடுதலைக்காக பாடுபட்ட அனைவருக்கும் மனமார்ந்த நன்றி

***சாந்தனின் தாயார் யாழ்ப்பாணத்தில் தெரிவிப்பு***

தனது மகனின் விடுதலைக்காகப் பாடுபட்ட இந்தியாவிலுள்ள அனைத்து மக்களுக்கும் யாழ்ப்பாணத்திலிருந்து நன்றி தெரிவித்தார் சாந்தனின் தாயார்.

இந்தியாவின் முன்னாள் தலைமை அமைச்சர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனைக் காலம் முடிந்து விடுதலை பெற்றுள்ள

பக்கம் 04

# டீசல், மண்ணெண்ணெய் விலைகள் அதிகரிப்பு

நள்ளிரவு முதல் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் விலைகளை அரசு அதிகரித்துள்ளது.

டீசலின் விலை 15 ரூபாவினாலும் மண்ணெண்ணெய் விலை 25 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதன்படி டீசலின் புதிய விலை 430 ரூபாய். மண்ணெண்ணெய்யின் புதிய விலை 365 ரூபாய்.

டீசல் மற்றும் மண்ணெண்ணெய்யினால் அரசுக்கு நட்டம் ஏற்பட்டு வருவதாக இராஜாங்க அமைச்சர் தெரி

பக்கம் 02

# இலங்கைப் பெண்கள் ஓமானில் ஏலத்தில் விற்கப்பட்ட கொடூரம்

## *சி.ஐ.டி. விசாரணைகள் மும்முரம்*

வீட்டு வேலைக்கு என்று அழைத்துச் செல்லப்பட்ட இலங்கைப் பெண்கள் ஓமான் நாட்டில் பாலியல் தொழிலுக்கு விற்கப்பட்டுள்ளார்கள் என்று காவல்துறையினர் தெரிவிக்கின்றனர். பெண்கள் வயதுக்கேற்ப தரம் பிரிக்கப்பட்டு நிறுத்தப்பட்டு ஏலம் மூலம் விற்கப்பட்டுள்ளனர் என்று காவல்துறை ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். இது தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் அவர் கூறினார்.

"இலங்கைப் பெண்கள் ஓமான் நாட்டுக்கு மோசடியாக அனுப்பப்

பக்கம் 04

செம்மண்
வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்
**ஆசிரியர்: தே.பிரேமானந்த்**

# ரணிலின் உரையும் உண்மை நிலையும்

அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் வியாழக்கிழமை ஆற்றிய உரையும் அதற்குத் தமிழ் ஊடகங்களில் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் மற்றும் வியாக்கியானமும் கூர்ந்து நோக்க வேண்டியவையாக இருக்கின்றன. அடுத்த சுதந்திர தினத்திற்குள் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு என்ற சாரப்பட ரணிலின் உரையைத் தமிழ் ஊடகங்கள் வெளிப்படுத்தியிருந்தன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஏற்கனவே தீபாவளிக்குத் தீர்வு, பொங்கலுக்குத் தீர்வு என்று கூறி அது எள்ளி நகையாடப்பட்ட பின்னணியில் ரணிலின் அறிவிப்பு அந்த வரிசையில் வந்த மற்றொன்று என்கிற எள்ளலை உடனடியாக ஏற்படுத்தினாலும் உண்மைக்கும் வெளிப்புத்தலுக்கும் இடையிலான ஆபத்தான வெளியையும் அது சுட்டிக்காட்டி நிற்கின்றது. இந்தப் போக்கு ஆபத்தானதும் மாற்றிக்கொள்ளப்பட வேண்டியதுமாகும்.

அரசியல் கைதிகளின் விடுதலை, உண்மையைக் கண்டறியும் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஆகியவற்றை உருவாக்குவதற்கான சட்டங்களை தொடர்புபட்ட அமைச்சர்கள் விரைவில் முன்வைப்பார்கள் என்று அறிவித்த அரச தலைவர், வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ் மக்களின் பிரச்சினை குறித்து ஆராய்ந்து வருகின்றோம் என்று தெரிவித்தார். காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளுக்கு மேலும் ஆட்களை நியமித்து அவற்றை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இவை பற்றிப் பேசும்போதே அடுத்த வாரமளவில் வடக்கு - கிழக்கைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் தனியான கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது என்கிற செய்தியையும் தெரிவித்தார். அத்தோடு வடக்கு கிழக்கின் அபிவிருத்தி தொடர்பிலும் பேசிய ரணில், 75ஆவது சுதந்திர தினத்திற்குள் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்று தெரிவித்தார்.

அவரது இந்தக் கருத்தே தமிழர்களுக்கு அடுத்த சுதந்திர தினத்திற்குள் தீர்வு என்பதாக ஊடகங்களில் வெளிப்படுத்தப்பட்டது. தமிழ் மக்கள் அரசியல் தீர்வு ஒன்றுக்கான வேணவாவோடு காத்திருக்கும் நேரத்தில் ரணிலின் நாடாளுமன்ற உரை அந்தத் தீர்வைக் குறித்துத்தான் அவர் பேசினார் என்று பொருள்கோடல் செய்யத்தக்க வகையில் வெளியிடப்பட்டது. ஆனால் ரணில் தனது நாடாளுமன்ற உரையின் எந்தவொரு இடத்திலும் அரசியல் தீர்வு குறித்துப் பேசவேயில்லை.

தமிழ் மக்கள் போருக்குப் பின்னரான காலத்தில் முன்வைத்து வரும் உடனடிப் பிரச்சினைகளான அரசியல் கைதிகள் விவகாரம், பயங்கரவாதத் தடைச் சட்டம், காணாமலாக்கப்பட்டவர்கள் விவகாரம், வடக்கு கிழக்கின் பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றிற்குத் தீர்வு காண்பது தொடர்பிலேயே அவரது உரை அமைந்திருந்தது. அதனைத் தமிழ் மக்களுக்கு ரணில் ஏதோ அரசியல் தீர்வைக் கொடுக்கப்போவது போன்று வெளிப்படுத்துவது ஏற்புடையதல்ல.

ரணில் விக்கிரமசிங்க ஒரு வருடத்திற்குள் புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் என்று ஏற்கனவே அறிவித்திருந்த நிலையில் வியாழக்கிழமையன்று அவர் ஆற்றிய உரையும் அதனோடிணைத்துப் பார்க்கப்பட்டு அரசியல் தீர்வில் அவர் அக்கறையோடு இருப்பது போன்று காட்டுவதில் எந்த நேர்மையும் இல்லை. தமிழர்களின் உடனடிப் பிரச்சினைகள் சிலவற்றைத் தீர்ப்பது தொடர்பிலான கருத்து மட்டுமே ரணிலின் உரையில் இருந்தது. எனவே அரசியல் தீர்வு பற்றிய தேவையற்ற எதிர்பார்ப்புக்களை உருவாக்குவதையும் சிங்கள ஆட்சியாளர்கள் அரசியல் தீர்வை முன்வைப்பார்கள் என்கிற விதமான நம்பிக்கையூட்டல்களும் கடைசியில் சம்பந்தர் ரணில் மீது வைத்த நம்பிக்கையைப் போலத்தான் போய் முடியும்.



### மயில், குரங்கு, மர அணில் உள்ளிட்ட

# பாதுகாக்கப்பட்ட 6 விலங்குகள் அந்த பட்டியலிலிருந்து நீக்கம்

பாதுகாக்கப்பட்ட வனவிலங்குகள் பட்டியலில் இருந்து 6 விலங்குகளின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன என்று அதிகாரிகள் தெரிவித்தனர். மர அணில், மயில், குரங்கு ஆகியவையும் இந்தப் பட்டியலில் அடக்கம்.

"தி மோர்னிங்" ஆங்கிலப் பத்திரிகைக்குக் கருத்துத் தெரிவித்த வனத்துறை அதிகாரிகள், பல்கிப் பெருகியுள்ள இந்த விலங்குகள் விவசாயத்துக்குப் பெரும் கேட்டை விளைவிப்பதன் காரணமாக இவற்றை பாதுகாக்கப்பட்ட விலங்குகளின் பட்டியலில் இருந்து நீக்குவதற்கு முடிவு செய்யப்பட்டது என்று தெரிவித்தனர்.

பட்டியலில் இருந்து இந்த 6 விலங்குகளும் நீக்கப்பட்டதால் அவற்றை வேட்டையாடலாம் பிடிக்கலாம் என்று கருதினால் அது தவறு, தண்டனைக்குரிய குற்றம் என்று குறிப்பிட்ட அதிகாரிகள், அவற்றின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இனிமேல் அதிகாரிகள் எடுப்பதற்கான அனுமதியே இதன் மூலம் கிடைத்துள்ளது என்று தெரிவித்தனர்.

"பல மில்லியன் ரூபாய் பெறுமதியான பயிர்கள் இந்த விலங்குகளால் நாசமாக்கப்பட்டுள்ளன. பாதுகாக்கப்பட்ட விலங்குகள் பட்டியலில் சேர்க்கப்பட்டதால் இவை பல்கிப் பெருகிப்போனதே இதற்குக் காரணம். பட்டியலில் இருந்து இவை நீக்கப்பட்டதால் அவற்றை வேட்டையாடலாம் அல்லது கொல்லலாம் என்று அர்த்தமல்ல. அவற்றின் எண்ணிக்கை கட்டுப்படுத்தப்படும் என்பதே அதன் பொருள். இந்த மிருகங்கள் வேட்டையாடப்படுவதற்கோ கொல்லப்படுவதற்கோ ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம்" என்று விவசாய அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த மிருகங்களால் 12.1 கோடி தேங்காய்கள் மற்றும் 8 ஆயிரம் மெட்றிக்தொண் நெல் ஆகியன அழிந்துள்ளன என்று விவசாயத்துறை அமைச்சர் மகிந்த அமரவீர நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட அமைச்சுக்களின் செயலர்கள் மட்டத்திலான குழுவின் அறிக்கை கிடைக்கப்பெற்று அது தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாகவும் அவர் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

இந்தப் பின்னணியிலேயே 6 விலங்குகளின் பெயர்களை பாதுகாக்கப்பட்ட பட்டியலில் இருந்து நீக்கும் முடிவுக்கு அதிகாரிகள் வந்துள்ளனர்.

---

டீசல்...

வித்திருந்த நிலையில் இந்த விலையேற்றம் அறிவிக்கப்பட்டுள்ளது.

## புளிக் கதலிப் பழங்கள் துபாய்க்கு இனி ஏற்றுமதி

இலங்கையிலிருந்து புளிக் கதலிப் பழங்கள் முதல் முறையாக பன்னாட்டுச் சந்தைக்கு ஏற்றுமதி செய்யப்படவுள்ளன. இந்தப் பழங்களை ஏற்றிய முதல் கப்பல் இந்த மாதத்திற்குள் புறப்படும் என்று விவசாயத்துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.
கார்த்திகை 26ஆம் திகதி 12 ஆயிரத்து 500 கிலோ புளிக் கதலிப் பழங்களை துபாய்க்கு ஏற்றுமதி செய்வதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார்.
விவசாய மாதிரித் தோட்ட நிகழ்ச்சியின் கீழ் ராஜங்கன பகுதியில் அமைக்கப்பட்ட வாழைத் தோட்டங்களின் அறுவடைகள் வெளிநாட்டுச் சந்தைகளுக்கு அனுப்பப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.
விவசாய நடவடிக்கைகளை நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் 200 ஏக்கர் நிலப் பரப்பில் இந்த வாழைகள் பயிரடப்பட்டுள்ளன. நாட்டுக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் நோக்கத்தோடு இவை உருவாக்கப்பட்டன.

## விடுதலையான...

ஆவணம் அவர்களிடம் கையளிக்கப்பட்டு விடுவிக்கப்படுவர் என்றும் நீதிமன்றத்தின் உத்தரவு கிடைக்கப்பெற்றதும் ஏனையவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் தமிழ்நாடு சிறைத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.
சாந்தன், முருகன், நளினி, ரவிச்சந்திரன், ராபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகிய 6 பேரையும் சிறையிலிருந்து விடுதலை செய்து சென்னை உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.
முன்னதாக இதே வழக்கில் குற்றவாளியாகத் தண்டனை பெற்றிருந்தவரான பேரறிவாளன் கடந்த வைகாசி (மே) மாதம் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டிருந்தார்.
அவரது விடுதலையை அடுத்து தன்னையும் அதுபோன்றே விடுவிக்கவேண்டும் என்று கேட்டு நளினியினால் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் அது நிராகரிக்கப்பட்டது. அந்தத் தீர்ப்பை எதிர்த்து நளினியினால் உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டது. அவருடன் ரவிச்சந்திரனும் தனது விடுதலையை வலியுறுத்தி மனு தாக்கல் செய்தார்.
ராஜீவ்காந்தி கொலை வழக்கில் பேறறிவாளனுக்குக் கிடைத்த நீதி அந்த வழக்கின் அனைத்துக் குற்றவாளிகளுக்குமான நீதியாக இருக்கவேண்டும் என்று மனுதாரரர்கள் சார்பில் வாதிடப்பட்டது. தமிழக அமைச்சரவை அவர்களை விடுதலை செய்யலாம் என்று பரிந்துரைத்த பின்னரும் தமிழ்நாடு ஆளுநர் ரவி, இந்த விடயத்தில் மத்திய அரசுதான் முடிவெடுக்கவேண்டும் என்று தெரிவித்து தமிழ்நாடு அமைச்சரவையின் முடிவை நடைமுறைப்படுத்தாமல் தாமதிப்பதையும் மனுதாரரர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.
இதையடுத்து நீதிமன்றத்திற்குள்ள தற்துணிபு அதிகாரத்தின் அடிப்படையில் ராஜீவ்காந்தி வழக்கின் அனைத்துக் குற்றவாளிகளையும் தண்டனைக் காலம் முடிந்து விடுவிக்க உச்ச நீதிமன்றத்தின் நீதியரசர்களான பி.ஆர்.கவாய், பி.வி. நாகரத்னா அடங்கிய ஆயம் தீர்ப்பளித்து.
இந்தியாவின் முன்னாள் தலைமை அமைச்சரான ராஜீவ் காந்தி 1991ஆம் ஆண்டு வைகாசி மாதம் 21ஆம் நாள் தமிழகத்தின் சிறிபெரும்புதூரில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டார். அந்த வழக்கை விசாரித்த பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றம் குற்றஞ்சாட்டப்பட்ட 26 பேருக்கும் தூக்குத் தண்டனை வழங்கித் தீர்பளித்தது. அதை எதிர்த்துச் செய்யப்பட்ட மேன்முறையீட்டில் உச்ச நீதிமன்றம் சாந்தன், முருகன், நளினி, பேறறிவாளன் ஆகிய நால்வரின் தூக்குத் தண்டனையை உறுதிப்படுத்தியது. ஜெயக்குமார், ராபர்ட் பயஸ், ரவிச்சந்திரன் ஆகியோரின் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்தும் உத்தரவிட்டது.
இந்தத் தண்டனைகளுக்கு எதிராக நடத்தப்பட்ட மக்கள் போராட்டம் மற்றும் சட்டப் போராட்டங்களின் தொடர் விளைவாக தமிழக முன்னாள் முதல்வர் மு.கருணாநிதியின் அமைச்சரவை நளினியின் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப் பரிந்துரைத்தது. அப்போதைய ஆளுநரால் அந்தப் பரிந்துரை நடைமுறைப் படுத்தப்பட்டது.
தமது தண்டனையையும் குறைக்கவேண்டும் என்று ஏனைய மூவரும் செய்த மனுக்களை விசாரித்த உச்ச நீதிமன்றம் தூக்குத் தண்டனையை நிறைவேற்றக் காலதாமதம் காட்டப்பட்டதைக் காரணம் காட்டி மூவரின் தண்டனையையும் ஆயுள் தண்டனையாகக் குறைத்தது.
இவர்கள் அனைவரும் நீண்ட காலமாகச் சிறையில் தண்டனை அனுபவித்துவிட்ட காரணத்தால் இவர்களை விடுதலை செய்யவேண்டும் என்று 2014ஆம் ஆண்டு மாசி மாதம் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா தலைமையிலான அமைச்சரவை பரிந்துரைத்தது. ஆனால் அதை மத்திய அரசு எதிர்த்தது. பின்னர் 2018ஆம் ஆண்டு ஜெயலலிதா தலைமையிலான அமைச்சரவை மீண்டும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.
இதை எதிர்த்து பேரறிவாளனால் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அதனை விசாரித்த நீதியரசர்கள் ஆயம் தற்துணிபு அதிகாரத்தின் அடிப்படையில் பேரறிவாளனை விடுவித்துத் தீர்ப்பளித்து.
பேரறிவாளனுக்கு இந்த வழக்கில் கிடைத்த நீதி ஏனையவர்களுக்கும் பொருந்தும் என்கிற அடிப்படையில் ஏனைய 6 பேரும் இப்போது விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள்.
"பேரறிவாளன் வழக்கின் தீர்ப்பு இந்த 6 பேருக்கும் பொருந்தும். சிறையில் இவர்களின் நன்னடத்தை, அங்கு பயின்ற கல்வி, பரோல் விடுமுறைகள், மருத்துவ ஆவணங்கள், ஆளுநர் ஏற்படுத்திய தாமதம் ஆகியவற்றைக் கவனத்தில்கொண்டு இந்தத் தீர்ப்பை வழங்குகின்றோம்" என்று நீதியரசர்கள் தெரிவித்துள்ளனர்.
தீர்ப்பையடுத்து முருகனைத் தவிர்த்து ஏனைய ஐவரும் இன்று விடுதலையாவார்கள் என்று சிறைத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். கடந்த 10 மாதங்களாக நளினி பரோல் விடுமுறை பெற்று அவரது வீட்டிலேயே இருக்கிறார். இன்று அவர் வேலூர் சிறைக்குத் திரும்பி தனது விடுதலைக்கான உத்தரவைப் பெற்றுக்கொண்டு விடுதலையாவார். ரவிச்சந்திரனும் அதேபோன்று பரோல் விடுமுறையில் உள்ளார். அவரும் சிறைக்குத் திரும்பி விடுதலைப் பத்திரத்தைப் பெற்று முறைப்படி முழு விடுதலையை அடைவார்.
சாந்தன் வேலூர் சிறையிலும் ராபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோர் புழல் சிறையிலும் உள்ளனர். நீதிமன்ற உத்தரவு கிடைத்ததும் இவர்கள் மூவரும் இன்றே விடுதலை செய்யப்படுவார்கள். வேலூர் சிறையில் உள்ள முருகன் மீது மற்றொரு நீதிமன்ற வழக்கு இருப்பதால் அந்த வழக்கின் கட்டளைகளுக்கு அமையவே அவரது விடுதலை அமையும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

## அரசுடன்...

சினைக்கான தீர்வு விடயத்தில் அரசுடன் பேசுவ தற்கு நாம் தயார், தமிழ் மக்கள் ஏற்கக்கூடிய தீர்வை அரசு முன்வைக்கவேண்டும் என்று வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு சுமந்திரன் தெரிவித்திருக்கிறார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் குள் சுமந்திரன் சொல் வதை மற்றைய நாடாளுமன்ற உறுப்பி னர்கள் ஏற்றுக் கொள்ளப்போவ தில்லை என்று மற்றொரு நாடாளு மன்ற உறுப்பினரான இராசையா சிறிதரன் தெரிவித் திருக்கும் நிலையிலும், கூட்டமைப்பிலுள்ள ரெலோ கட்சி சுமந்திரனின் கருத்துக்களுக்கு முரண்பாடான கருத்துக்களையும் போட்டிச் செயற்பாடுகளையும் வெளிப்படுத்தி வரும் நிலையிலும் அரசுடனான பேச்சுத் தொடர்பில் சுமந்திரனின் கருத்து கட்சியின் கருத்தாக இருக்குமா என்பது தொடர்பில் தெளிவற்ற நிலையே காணப்படுகின்றது.
அரச தலைவரின் அழைப்புத் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களோ, கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களோ இதுவரை கூடிப்பேசி எந்தவொரு முடிவையும் எடுக்க வில்லை.

---

## இலங்கைப்...

பட்டு பாலியல் தொழிலுக்காக ஏலத்தில் விற் கப்பட்டனர் என்று கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் தொடங்கப் பட்டன. இதனை ஆராய குற்றப் புலனாய்வுத் திணைக்கள (சிஐடி) அதிகாரிகள் ஓமான் சென்றனர். அவர்கள் இலங்கைப் பெண்கள் ஏலத்தில் விற்கப்பட்டதைக் கண்டறிந்துள்ளனர். இலங்கையிலிருந்து சென்று ஓமான் நாட்டில் நிர்க்கதியாகி இருந்த 45 பெண்களை மீட்ட இந்தக் குழுவினர் அவர்களை அங்குள்ள இலங்கைத் தூதரகத்தில் ஒப்படைத்துள்ளனர்" என்றார் காவல் ஊடகப் பேச்சாளர் மூத்த காவல் அத்தியட்சகர் நிகால் தல்துவ.
வீட்டு வேலை வாய்ப்பைப் பெற்றுத் தரும் முகவர் நிறுவனங்கள் என்கிற போர்வையில் ஓமானில் உள்ள சில நிறுவனங்களும் இலங் கையிலுள்ள சில நிறுவனங்களும் இணைந்து இந்த மோசடியில் ஈடுபட்டுள்ளன என்று காவல்துறை யினர் சந்தேகிக்கின்றனர்.



இந்த மோசடி தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தப்படும், அதன் அறிக்கை கிடைத்ததும் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் காவல் பேச்சாளர் தெரிவித்தார்.

---

## மகனின்...




இலங்கையைச் சேர்ந்த சாந்தனின் குடும்பம் யாழ்ப்பா ணத்தில் வசிக்கின்றது.
அவரது தாயார் ஊடகங்களிடம் பேசும்போது, தனது மகனை மீட்டுத் தந்த அனைவருக்கும், அனைத்து இந்திய மக்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.
தனது மகன் 21 வயதில் சிறைக்குச் சென்று இப்போது 53 வயதில் வெளியே வருகின்றார் என்று தெரிவித்த அவர், தனது மகனைக் கட்டியணைத்து அன்பைச் சொரியக் காத்துக்கிடக்கிறார் என்றும் தெரிவித்தார்.
"எனக்கு உடல் நலமில்லை. இருந்தாலும் அவன் வரும்வரைக்குமாவது நான் இருக்கவேணும். என்ர மகனுக்கு ஒரு மாதமாவது சமைச்சுக் குடுக்கவேண்டும். என்ர பிள்ளையோட இருக்க வேணும். இது 30 வருடக் காத்திருப்பு. மகன்கள் உள்ள எல்லாத் தாய் மாரும் அதனை உணர்ந்துகொள்ளுங்கள்" என்றார் கண்ணீர்மல்க.
மகனின் விடுதலை குறித்த செய்தியறிந்து எப்படி யென்று சொல்ல முடியாத மகிழ்ச்சியில் தானும் குடும் பத்தினரும் இருக்கின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.



# இரண்டுமே ஏமாற்றுகள்...!

நியூட்டன்

கடந்த வாரம் அமைச்சர் நிமால் சிறீபால டி சில்வா இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் ஒரு கருத்தை வெளியிட்டார். தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வொன்று அவசியம் என்றால் தமிழ்த் தலைவர்கள் தமக்குள் ஒன்றுபட்டு முதலில் பொது இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் என்பதே அவரது கருத்து. இது இலகுவில் நடக்கக் கூடியதல்ல. தமிழ்த் தரப்பினருடன் பரீட்சயப்பட்ட நிமலுக்கு இது நன்கு தெரியும்.

புலிகள் - அரசுக்கு இடையிலான நோர்வே அனுசரணையிலான அமைதிப் பேச்சுக்களின்போது இலங்கை அணித் தலைவராக இருந்தவர் நிமால். தமிழ்த் தலைவர்களுக்கான தடை தாண்டல் பரீட்டையாகப் பன்னாட்டு அமைப்புகளிடம் இதைக் காட்ட முயல்கிறார் அவர். தமிழ்த் தலைவர்களின் ஒற்றுமைக்கும் தமிழ் மக்களுக்கான தீர்வுக்கும் முடிச்சிடுவது நகைப்புக்குரியது. எனவே இது முற்றிலும் ஏமாற்று என்பது புரிகிறது.

**சுமந்திரனின் கருத்து**

நிமாலின் கருத்துக்கு மறுத்தான் விடும் வகையிலான கருத்தொன்றை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வெளியிட்டார். தமிழ்த் தலைவர்களாகிய நாங்கள் சமஷ்டித் தீர்வு என்ற விடயத்தில் ஒற்றுமைப்பட்டே செயற்படுகிறோம், சமஷ்டி என்ற எண்ணக்கரு எம்மை ஒற்றுமையாக்கி வைத்திருக்கிறது என்பதே அவரது அந்த மறுத்தான் கருத்து.

அவரது அந்தக் கருத்தை அவரது கட்சிக்குள் இருப்பவர்களே இன்று ஏற்றுக்கொள்வார்களோ தெரியாது. கட்சிக்குள்ளேயே அவருக்கு எதிராகப் பலர் கருத்து வெளியிட்டு வருகின்றனர். சக நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் எதிர்ப்புடன் கருத்துக் கூறுகிறார். தான் தோல்வி அடைந்தாலும் பரவாயில்லை அன்ரன் பாலசிங்கம் போன்ற ஆற்றலுள்ள சுமந்திரன் வெற்றிபெற வேண்டும் என்று 2020 தேர்தல் காலத்தில் கூறிய சிறீதரன் 2 ஆண்டுகளில் சுமந்திரன் கூறுவதை நாங்கள் ஏற்க மாட்டோம் என்று போர்க் கொடி தூக்கியிருக்கிறார். சுமந்திரனைக் கட்சிக்குள் உள்வாங்கிய பின்னரே இவ்வளவு குளறுபடிகளும் ஏற்பட்டன என்று ஊடகங்களுக்கு அறிவிக்கிறார் தமிழ் அரசுக் கட்சியின் கொழும்புக் கிளையைச் சேர்ந்த சட்டத்தரணி கே.வி தவராசா. இவ்வாறிருக்கத் தீர்வு விடயத்தில் தமிழ்த் தலைவர்கள் எல்லோருமே ஒற்றுமையாக இருக்கிறோம் என்கிறார் சுமந்திரன். நம்பக் கூடியததுதானா?

**கூர்ந்து பார்த்தாலும் ஒற்றுமை தெரியுமா?**

ஒருவர் தனக்குப் பக்கத்தில் நின்றவருக்குத் தூரத்தில் தெரிந்த மரக் கிளை ஒன்றைக் காட்டி அதோ அந்தக் கிளையில் 5 எறும்புகள் ஊர்ந்துபோவது உனக்குத் தெரிகிறதா? என்று கேட்க, அதை உற்றுப் பார்த்த அவர், ஓமோம் தெரிகிறது. அதில் கடைசியாகப் போகிற எறும்பு பின் காலை நொண்டிக் கொண்டு போவது தெரிகிறதா என்றாராம். எறும்பே இல்லாத கிளையைக் காட்டித் தனது கண்ணின் கூர்மை துல்லியமானது என்று காட்டுவதற்காகப் புரளி பேசியவர் வாயடைத்துப் போனாராம். அந்தக் கிளையில் 5 எறும்புகள் ஊர்ந்து செல்வது தெளிவாகத் தெரிவது மட்டுமல்லாது கடைசி எறும்பு பின் காலை நொண்டிக் கொண்டு போகிறது என்று பதில் சொன்னது அவரை நன்கு குழப்பி விட்டது. இதே நிலைதான் நிமாலுக்கு மறுத்தான் விட்ட சுமந்திரனதும் கருத்தும். ஒற்றுமையற்ற தமிழ்த் தலைவர்கள் என்றோ ஒரு காலத்தில் திம்புவில் இணைந்து கேட்டார்கள் என்பதை வைத்துக் கொண்டு



# அலசப்பட்டு அமைதியடைந்த ஆசிரியைகளின் ஆடை விடயம்



ரவீந்திரன்

அண்மையில் சர்ச்சைக்குரிய ஒரு விடயமாக இலங்கை ஆசிரிய சங்கத் தலைவர் ஜோசப் ஸ்டாலினால் முன்வைக்கப்பட்ட ஆசிரியர்களின் உடையில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும் என்ற செய்தி விளங்கியது.

ஆசிரியர்களின் ஆடை தொடர்பில் அவர் கருத்து வெளியிடுவதற்கு முன்னர் இலங்கை அரசின் அரசாணை ஒன்றில் அரச ஊழியர்களின் உடை தொடர்பில் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது. அரச ஊழியர்கள் தமக்குச் சௌகரியமான உடைகளை உடுத்தி வேலைக்குச் செல்ல முடியும் என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. அவரவருக்குச் சௌகரியமான ஆடைகளை அணிந்து வேலைக்குச் செல்வது என்பது ஆசிரியைகளின் விடயத்தில் பொருத்தமாக இருக்குமா என்பது கவனிக்கப்படவேண்டும்.

**பிக்குகளின் காவியுடைபோல**

அரச ஊழியர்களின் ஆடை தொடர்பில் வெளியான அரசாணைக்குப் பின்னர் அது தொடர்பில் கருத்து வெளியிட்ட ஆசிரியர் சங்கத் தலைவர் ஜோசப் ஸ்டாலின், ஆசிரியர்களும் அவர்களுக்குச் சௌகரியமான உடையில் பாடசாலைக்குச் செல்ல அனுமதிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்திருந்தார். பிக்குகளின் காவியுடைபோல ஆசிரியர்கள் தொடர்ந்தும் ஒரே உடையை அணிந்திருக்கத் தேவையில்லை என்றார். ஆசிரியர்களின் உடைகளை மாற்றலாம் என்பதே அவரது வாதமாக இருந்தது.

**ஆசிரியர் மட்டத்தில் எதிர்ப்பு**

மிக நீண்ட காலமாக ஆசிரியைகள் சேலை உடுத்திப் பாடசாலை செல்வதே வழக்கமாக இருக்கிறது. சிங்கள ஆசிரியைகள் உசரி அணிந்தும், தமிழ் ஆசிரியைகள் சேலை அணிந்தும், முஸ்லிம் ஆசிரியைகள் சேலையுடன் அவர்களின் பாரம்பரிய உடைகளை அணிந்தும் பாடசாலைக்குச் செல்வது வழமையாக இருக்கிறது. இது ஆசிரியைகளுக்குச் சிறப்பான மரியாதையையும் மாணவர்களுக்குத் தாய்மை உணர்வையும் கொடுப்பதாக இருந்தது. இந்த நடைமுறையை மாற்றி ஆசிரியைகள் தாங்கள் விரும்பும் உடைகளில் பாடசாலைக்குச் செல்ல அனுமதித்தால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான ஆடைகளை அணிந்து செல்லவும் இதுவரை பாடசாலைகளில் இருந்து வரும் ஒழுங்குமுறைகள் மாற்றப்படவும் வாய்ப்பு ஏற்பட்டுவிடும். இதனால் ஆசிரியைகள் பலர் ஸ்டாலினின் கோரிக்கைக்கு மாறாகக் கருத்து வெளியிடும் நிலை காணப்படுகிறது.

சமஷ்டிதான் அனைவரும் கேட்பது என்று இன்றைக்கும் சொல்லமுடியாது.

தமிழர்களின் ஒற்றுமையின்மை என்கிற ஒரு விடயத்தை வைத்து அரசு சார்பில் ஆளுக்காள் காரணம் கூறித் தப்பிவிட முடியும். இதில் மக்கள் பங்களிப்பு என்றொரு விடயமே இல்லை. மக்கள் வெறும் பார்வையாளர்களாக மட்டுமே இருக்க முடியம்.

**பெரும்பான்மை இனத்தவர் முன்மொழிய வேண்டும்**

பெரும்பான்மை இனத்தவர்களான சிங்களவர்களே தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டும். அதற்குத் தமிழ் அரசியல் தலைவர்கள் தாம் ஒற்றுமையாக இருப்பதை முதலில் காட்ட வேண்டும் என நிபந்தனை விதிப்பது தேவையற்ற ஒன்று. தீர்வைப் பெறுவதற்குத் தமிழ் அரசியல்வாதிகள் ஒற்றுமைப்பட வேண்டிய தேவையில்லை. தீர்வை வழங்குவதற்குச் சிங்களக் கட்சிகள் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டியதே இங்கு பெரும் பிரச்சினை. "சிங்களக் கட்சிகள் ஓரணியில் வருவது தீர்வுக்கு முக்கியம்" என்றிருக்கிறார் ரெலோ கட்சியின் பேச்சாளர் கு.சுரேந்திரன்.

இதுவே சரியானது. சிங்களத் தரப்பினர் தீர்வை முன்வைத்தால், தமிழ்த் தலைவர்கள் எடுக்கும் முடிவுக்கான தீரப்பைத் தமிழ் மக்கள் தமிழ் அரசியல் கட்சிகளுக்குத் தேர்தலின்போது காட்டுவார்கள். இத்தகைய தமிழ், சிங்கள கருத்துகளை வைத்துப் பார்க்கும்போது ஒன்று மட்டும் தெட்டத் தெளிவாகத் தெரிகிறது. தீர்வு இப்போதைக்குச் சாத்தியமில்லை என்பதும் அதை வைத்து அடுத்த தேர்தல் வரை காலத்தை இரு தரப்பினரும் இழுத்தடிக்கப் போகிறார்கள் என்பதுமே அது.

சேலை உடுப்பதை மாற்ற முயன்றால் அது கலாசாரச் சீரழிவாக மாறிவிடும் என்றும் சேலை அணிவது ஆசிரியர்களைப் பொறுத்தவரை செலவுச் சுருக்கமான விடயம் என்றும் அது எளிமையான உடை என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

**பௌத்த பிக்குகளின் கருத்து**

தமது காவியுடை பற்றிக் கருத்து வெளியிடுவதற்கு ஜோசப் ஸ்டாலினுக்கு எந்தவித அருகதையும் இல்லை என்றும் அவர் அரச சார்பற்ற நிறுவனங்களின் செல்வாக்குக்கு உட்பட்டு (என்.ஜி.ஓ.) செயற்படுகிறார் என்றும் பிக்குகள் குற்றம்சாட்டினார்கள். ஆசிரியைகள் சேலை அணிவதே சிறந்தது என்பதாகப் பிக்குகளின் கருத்தும் அமைந்தது.

**ஸ்டாலினின் நிலை**

ஜோசப் ஸ்டாலின் ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டு விடயத்தில் அரசுக்கு எதிராகப் போராடி அதற்குத் தீர்வு கண்டவர். பொருளாதார நெருக்கடியான சூழலிலும் பல கோடி ரூபாய்களை அதற்காக அரசு ஒதுக்கியது. அதன் பின்னரான காலப்பகுதியில் ஆசிரியர்களின் பிரச்சினைகளை ஆர்ப்பாட்டங்கள் எதுவுமின்றிப் பேச்சுகள் மூலம் தீர்ப்பதற்கு ஜோசப் ஸ்டாலின் முன்வந்திருக்க வேண்டும். ஆனால் அவர் ஆசிரியர் சங்கத்தை அரசியல் கட்சியின் அணுகுமுறைபோல மாற்றியிருக்கிறார். அது மிக மோசமான விடயமாகப் பார்க்கப்படுகிறது.

தொடக்கத்தில் அரசியல் கட்சிகள் ஆசிரியர்களின் பலத்தையும் ஆசிரியர் சங்கத்தின் பலத்தையும் அரசுக்கு எதிரான தமது போராட்டங்களுக்காகப் பயன்படுத்திக்கொண்டனர். தற்போது ஆசிரியர் - மாணவர் விடயத்தைத் தாண்டி ஸ்ராலினும் தன்னை ஓர் அரசியல் கட்சித் தலைவர்போல காட்டிக் கொள்கிறார். இதனால் ஸ்ராலினின் ஆசிரியர் சங்கத்தில் இயங்குவதா அல்லது வெளியேறுவதா என்ற நிலைப்பாட்டுக்கு ஆசிரியர்கள் பலர் வந்திருப்பது தெரிகிறது.

மாணவர்களின் மதியபோசன உணவு, போசாக்கின்மை, கற்றல் வழிமுறைகளில் காணப்படும் குறைபாடுகள் பற்றிப் பேசியிருக்கவேண்டிய ஸ்ராலின் ஆசிரியர்களின் ஆடை விடயத்தில் முட்டி மோதியிருப்பது தவறான ஓர் அணுகுமுறையாகவே பார்க்கப்படுகிறது.

**கல்வி அமைச்சரின் அறிவிப்பு**

ஆசிரியர்களின் உடை விடயத்திலோ மாணவர்களின் உடை விடயத்திலோ எவ்வித மாற்றங்களும் செய்யப்படமாட்டாது எனக் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த அண்மையில் நாடாளுமன்றில் வைத்துத் திட்டவட்டமாக அறிவித்திருந்தார். ஸ்டாலின்போன்ற தொழிற் சங்கவாதிகள் பாடசாலை விடயத்தில் பொறுப்புடன் செயற்படவேண்டும் என்பதற்கு ஆசிரியைகளின் உடை தொடர்பான அவரது கருத்துக்கு எழுந்த எதிர்வினைகள் அவருக்குப் படிப்பினையைக் கொடுத்திருக்கின்றன.



# திலினிப் பிரியமாலி எனும் ஏமாற்றுக்காரி



**சத்தியநாதன்**

இலங்கையில் நிலவி வரும் அரசியல் பிரச்சினைகள், பொருளாதாரப் பிரச்சினைகளைத் திசை திருப்பும் அளவுக்குத் திலினிப் பிரியமாலி என்கிற பண மோசடிக்காரி பற்றிய கதைகள் சிங்கள ஊடகங்களில் மேல் எழுந்துள்ளன. பிக்கோ குரூப் ஒவ் கொம்பனி பிறைவெட் லிமிடெட் என்கிற பெயரில் நிதி நிறுவனம் ஒன்றைச் சட்டபூர்வமாகப் பதிவு செய்து தற்போது வரை 25 கோடி ரூபாவுக்கு மேல் அந்தப் பெண் மோசடி செய்துள்ளமை தெரியவந்திருக்கிறது. இது தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து வருவதால் இனிவரும் நாள்களில் இந்தத் தொகை அதிகரிக்க வாய்ப்புண்டு. இந்த நூதனக் கொள்ளையை - பணமோசடியை தனிநபராக ஒரு பெண்ணால் எவ்வாறு செய்ய முடிந்தது என்பதே இங்குள்ள கேள்வியாகும்.

**சிங்கள ஊடகங்களின் கவனம்**

திலினியின் மோசடி பற்றிச் சிங்கள ஊடகங்களில் வெளியாகிய செய்திகள் இவ்வாறு அமைந்தன. திலினிப் பிரியமாலி அடைக்கப்பட்டிருந்த சிறை அறைக்குள் கைத்தொலைபேசி கண்டுபிடிப்பு, திலினிப் பிரியமாலியுடன் வர்த்தகத் தொடர்பிலிருந்த பிக்கு கைது, திலினிப் பிரியமாலியின் பணமோசடி வியாபாரத்தில் காவல்துறை அதிகாரிகளுக்கும் தொடர்பு, ஞானகி சிறிவர்த்தனவும் திலியுடன் தொடர்பு எனக் கைது செய்யப்பட வாய்ப்புண்டு,




திலினிப் பிரியமாலியின் வர்த்தகப் பங்காளி கைது, திலினிப் பிரியமாலியின் ஏமாற்றுகளுக்கு கிறிஸ் கொமிற்றியின் அனுசரணையும் பெறப்பட்டுள்ளது, நடிகைகள், அறிவிப்பாளர்களை நிதி மோசடிக்குப் பயன்படுத்தியுள்ளார் திலினி, அவருடன் தமக்கு எவ்வித தொடர்பும் இல்லை என்று மகிந்த ராஜபக்சவின் குடும்பம் அறிவிப்பு, திலினியிடம் 250கோடி ரூபாவுக்கான முறைகேடு கண்டறியப்பட்டது, திலினியின் பிக்கோ திரைப்பட நிறுவனத்தை இலங்கைத் திரைப்படத் துறை பொறுப்பேற்றது, திலினியின் சட்டத்தரணி அமைச்சர் விஜயதாச ராஜபக்சவின் இணைப்புச் செயலரா?, திலினி தனது நிதி நிறுவனத்தில் முதலீடுகளைச் செய்வதற்கு இரண்டு அமைச்சர்களின் பரிந்துரைகளைப் பயன்படுத்தினாரா? வணக்கத்துக்குரிய பொரளை சிறி சுமண தேரர் திலினி பிரியமாலியின் ஊழல் விடயத்தில் கைது எனப் பல வட்டாரங்களையும் தொடர்புபடுத்தி, உள்ளீர்த்துப் பெரும் வலைப்பின்னலாக விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளமையையே இந்தச் செய்திகள் காட்டி நிற்கின்றன.

**டாம்பீகமான அலுவலகம்**

கொழும்பு வர்த்தக மையத்தில் அதிநவீன ஆடம்பர அலுவலகம் ஒன்றை நிறுவி நடிகர்கள், அமைச்சர்கள், அரசியல்வாதிகள், பிக்குகள் ஏனைய நிதி நிறுவனங்கள் எனப் பலரையும் ஏமாற்றியிருக்கிறார் திலினி. அவர் கைது செய்யப்பட்ட பின்னர் தமக்கும் திலினிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று சொல்லித் தாம் முதலீடு செய்த பணம் இல்லாது போனாலும் பரவாயில்லை என விலகி ஓடிய பலர் தொடர் விசாரணைகளின் பின்னர் முறைகேடுகளுக்கு உடந்தையாக இருந்தார்கள் என்கிற குற்றச்சாட்டுகளில் சிக்கியிருக்கின்றனர். இந்தப் பண முதலீடுகள் வெளிநாட்டுப் பங்குச் சந்தை ஒன்றில் முதலீடு செய்யப்படுகின்றன என்று திலினியின் வலைப்பின்னலில் பணியாற்றுபவர்களால் பலர் ஏமாற்றப்பட்டுள்ளனர். இது பற்றிய பல தொலைபேசி உரையாடல்களும் சிக்கியுள்ளன.

தம்மிடமுள்ள கறுப்புப் பணத்தை வெளியிட முடியாத சட்டச் சிக்கல் காரணமாகவே அரசு சாராத திலினியின் தனியார் நிறுவனத்தில் பலர் முதலீடு செய்திருக்கின்றனர்.





Sri Lankan monk Ven. Borelle Sirisumana Thero

நிதி நிறுவன மோசடியில் தமிழர்கள் முன்னோடிகள்

1980களில் யாழ்ப்பாணத்தில் மிகவும் பிரபலமான நிதி நிறுவனமாக விளங்கியது சப்ரா. அந்த நிறுவனத்தில் முதலீடு செய்தவர்களிடம் நிறுவனம் நட்டப்பட்டுவிட்டது என்று கைவிரித்தபோது அதில் முதலீடு செய்திருந்த பலரும் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். குறிப்பாக ஓய்வூதியர்கள் பெரிதும் ஏமாற்றப்பட்டார்கள். ஏனையவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகினர். சப்ரா நிறுவன உரிமையாளர்களும் அவர்களின் உறவினர்களும் அவர்கள் பணிக்கமர்த்தி வைத்திருந்தவர்களும் தமக்குத் தெரிந்தவர்களை குறிப்பாக அன்றைய மேல் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களை இந்த நிறுவனத்தில் முதலீடு செய்ய வைத்தனர். முதலீடு செய்தவர்கள் பின்னர் ஏமாற்றப்பட்டபோது இவர்கள் தமக்கும் நிறுவனத்துக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்பதுபோலக் கையைவிரித்துவிட்டுச் சென்றுவிட்டனர். முதலாளியான தமிழர் குடும்பத்தோடு வெளிநாட்டுக்குத் தப்பியோடிவிட்டார். அதனால் இவ்வாறு நிதி மோசடியில் ஈடுபடுவதில் தமிழர்களே இந்த நாட்டில் முன்னோடிகள்.

**தமக்குத் தெரிந்தவர்களை பிரமுகர்களுடன் ஒளிப்படங்கள்**

தமிழ்ப் பேராசிரியர் ஒருவர் சாவடைந்தபோது அப்போதைய பாதுகாப்புச் செயலரான கோத்தாபய ராஜபக்ச மரியாதை நிமித்தம் பேராசிரியரின் சாவு வீட்டில் கலந்துகொண்டார். அவருடன் நின்று படம்பிடித்துக் கொண்ட பேராசிரியரின் மகள் அந்தப் படத்தைக்காட்டித் தமக்கும் மகிந்த அரசுக்குமான செல்வாக்காகக் காட்டி யாழ்ப்பாணத் தமிழர் பலரிடம் கொழும்பில் வீடுகள், சொத்துகள், வியாபார அனுமதிகள் பெற்றுத்தருவதாகப் பல கோடி ரூபாய்களை ஏப்பம் விட்டார். அவரை நம்பிப் பணம் கொடுத்தவர்கள் அதை வெளிப்படுத்த முடியாமல் அமத்தி வாசிக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

இதே பாணியிலேயே திலினி பிரியமாலியும் பல்வேறு தரப்பினருடன் எடுத்துக்கொண்ட படங்களை வைத்துத் தனது செல்வாக்கு அது என்று காட்டிப் பணமோசடி செய்துள்ளார்.

இவற்றுக்கு மகுடம் வைத்ததுபோல கலகொட அத்தே ஞானசார தேரரும் சிக்கியிருக்கிறார். நான் பக்தர்களுக்குப் பௌத்த உபதேசம் செய்ததன் மூலம் 40 கோடி ரூபா எனக்குக் கிடைத்தது. அந்த 40 கோடி ரூபாவையும் பௌத்த தர்மத்தைப் பாதுகாப்பதற்காக நான் திலினியிடம் கொடுத்தேன். என்கிறார். இதன் மூலம் சிங்களவர் கூறும்பௌத்தம், பௌத்த தர்மம் போன்றன எங்கு போய்க் கரையொதுங்கியிருக்கின்றன என்பதையும் அறிய முடிகிறது.

திலினி பிரியமாலி என்ற ஏமாற்றுக்காரியிடம் முக்கிய நபர்கள் பலர் சிக்கிச் சின்னாபின்னப்பட்டிருக்கின்றனர் என்பதே இவற்றின் வெளிப்படை.

---

விஜய் அசோகன்

04

# ஃபின்லாந்து கல்வி: போட்டியிலிருந்து விடுதலை

உலகின் மதிப்புக்குரிய கல்வி ஆய்வுகளில், ஃபின்லாந்து கல்வித்துறை தொடர்ந்து முன்னணி வகிக்கிறது. இப்படிப்பட்ட நிலையை வந்தடைய வரலாற்றில் எத்தகைய பாதையை ஃபின்லாந்து சமூகம் கட்டமைத்து வந்தது என்பதை முந்தைய மூன்று அத்தியாயங்களில் வாசித்தோம். இந்த முதல் நிலையில் ஃபின்லாந்து தொடர்ந்து நீடிக்க அந்த நாட்டின் கல்வித்துறை எத்தகு அணுகுமுறைகளைக் கடைப்பிடிக்கிறது என்பதை இந்த அத்தியாயத்தில் வாசிப்போம்.



**கல்வித் துறையின் அணுகுமுறை**

அரசு எந்த ஒரு புதிய முயற்சியை மேற்கொள்ளும் முன்னரும் பல்வேறு கல்வியியல், உளவியல், சமூகவியல் ஆய்வுகளைச் செய்து, எல்லோருடனும் முடிவுகளை விவாதித்து அதன் பின்பே நடைமுறைக்குக் கொண்டு வரும்.

ஒரு ஆசிரியருக்கு அளிக்கப்படும் ஆசிரியர் பயிற்சிக் கல்வியானது முனைவர் பட்ட ஆய்விற்கு இணையான கள ஆய்வுகளையும் ஆய்வறிக்கைகளையும் உள்ளடக்கி இருக்கும்.

பல்வேறு கல்வித்துறைச் செயற்பாடுகளை, பல்கலைக்கழக, பயனுறுப் பல்கலைக்கழகம் மற்றும் தொழில் நிறுவனங்களோடு இணைந்தே ஆய்வுசெய்து நடைமுறைக்குக் கொண்டுவருகின்றனர்.

**முறைசார் பாடத்திட்டங்கள் அற்ற வகுப்புத் திட்டங்கள்**

ஃபின்லாந்தின் இன்றைய கல்விமுறைக்கான அடிப்படை 1945இல், மேட்டி கோஸ்கென்னிமியின் தலைமையில் அமைக்கப்பட்ட தொடக்க நிலைக் கல்விக் குழுவால் உருவாக்கப்பட்டது. கோஸ்கென்னிமி, அதற்கு சில ஆண்டுகளுக்கு முன்பு தொடக்கக் கல்வி, பயிற்சிகள், ஆசிரியர்களுக்கான கல்வி ஆகியவற்றினை உள்ளடக்கிய வழிகாட்டி நூலை எழுதியிருந்தார். இந்தக் குழு பரிந்துரைத்த விஷயங்களில் மிக முக்கியமானவை:

**வகுப்பறையிலோ பள்ளியிலோ கல்வி சார்ந்த போட்டிகள் மாணவ, மாணவிகளுக்குள் புகுந்துவிடாதபடி, எவர் ஒருவரின் மதிப்பீடுகளும் எவர் ஒருவருக்கும் தெரியாத வண்ணம் பார்த்துக்கொள்கிறார்கள்**

**எல்லோருக்கும் தரமான, சமமான, பாரபட்சமற்ற கல்வி**

பாடத்திட்டங்கள் தனித்து வகுக்கப்படாமல், ஒவ்வொரு தனிமனிதருடைய உள்ளார்ந்த செயற்பாடுகளை ஊக்குவித்தும், அந்தத் தனிமனிதர்களைச் சமூகத்தின் அங்கமாக மாற்றவும் ஏதுவாகக் கல்வித்திட்டம் வரையறுக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு காலகட்டத்தின் மாணவ, மாணவியரின் சூழலுக்கு ஏற்ப ஆசிரியர் பயிற்சிப் பள்ளியின் செயல்திட்டங்களும் பாடத்திட்டங்களும் மேம்படுத்தப்பட வேண்டும்.

ஃபின்லாந்தின் வருங்காலத்தின் வளர்ச்சியினை மையப்படுத்தி மாணவ, மாணவிகளின் அறிவு, திறன் வளர்க்கும் விதமாக வகுப்பறைக் கல்வித் திட்டங்களை ஆசிரியர்கள் உருவாக்க வேண்டும்.

பல நாடுகளில் கல்வியாளர்களும், குழந்தை நேயச் செயற்பாட்டாளர்களும் கனவாகப் பேசிக்கொண்டிருக்கும் விஷயங்களை எப்போதோ நிறைவேற்றிவிட்ட இடம் ஃபின்லாந்து. ஆம், குழந்தைநேய அணுகுமுறைதான் அங்குள்ள கல்வியின் அடித்தளம்!

**குழந்தையின் 7 வயதிற்கு மேலேதான் பள்ளிக் கல்வி தொடங்குகிறது**

மிகக் குறைந்த நேரம், குறைந்த நாட்களே இயங்கும் வகுப்பறைச் செயல்பாடுகள். வீட்டுப்பாடங்கள் இல்லை, பெற்றோர்களின் அழுத்தமோ, ஆசிரியர்/ஆசிரியைகள் வழியே உருவாக்கப்படும் மன அழுத்தமோ இல்லை. தேர்வுகளோ, மதிப்பெண்களோ ஒவ்வோர் ஆண்டின் வகுப்பையும் நிறைவுசெய்யவில்லை. மாறாக, அவ்வாண்டு குழந்தைகள் புதிதாகக் கற்றவை என்ன, கிடைத்த அனுபவங்கள், பட்டறிவு என்ன? ஏனைய குழந்தைகளுடனும் சமூகத்துடனும் எத்தகைய சமூக இணைவைக் குழந்தைகள் பெற்றிருக்கின்றனர்? விளையாட்டுகளில் எத்தகைய ஆர்வத்தையும், பங்களிப்பையும் அவர்கள் தந்திருக்கின்றனர்? கலை மற்றும் அறிவியல் செயல்பாடுகளில் காட்டிய ஆர்வம் என்ன?

**இந்த விஷயங்களையெல்லாம் ஆசிரியர்கள் கணக்கிடுகிறார்கள்**

இப்படித்தான் மாணவர்களின் வளர்ச்சியையும் மேம்பாட்டையும் மதிப்பிடுகிறார்கள். மிக முக்கியமாக, பாலின, மொழி, இன, பொருளாதார வேறுபாடுகள் அற்ற சிந்தனையைப் பெருக்கி, சமத்துவமான மனநிலையை உருவாக்குதலை வகுப்பறைச் செயல்பாடுகளில் ஒன்றாக வகுத்து வைத்திருக்கிறார்கள்.

**போட்டி தவிர்த்தல்**

அடுத்து, ஃபின்லாந்து கல்வித் துறையில் நாம் கவனிக்க வேண்டிய முக்கியமான அம்சம், போட்டியைத் தவிர்த்தல்!

வகுப்பறையிலோ பள்ளியிலோ கல்வி சார்ந்த போட்டிகள் மாணவ, மாணவிகளுக்குள் புகுந்துவிடாதபடி, எவர் ஒருவரின் மதிப்பீடுகளும் எவர் ஒருவருக்கும் தெரியாத வண்ணம் பார்த்துக்கொள்கிறார்கள். மாணவ, மாணவிகளில் அறிவானவர், நன்றாக படிக்கக்கூடியவர், உயர்வானவர் என்று யாரையும் தரம் பிரித்துக் காட்ட மாட்டார்கள்.

ஆண்டு நிறைவில் மாணவ, மாணவியரின் அவ்வாண்டுச் செயற்பாடுகளை அவரவர் பெற்றோருடனான தனிப்பட்ட சந்திப்பில் விளக்கும்போதும்கூட, அந்த ஆண்டு குழந்தை என்ன கற்றுக்கொண்டது என விளக்குகிறார்களே தவிர, குழந்தை கற்றுக்கொள்ளாத அம்சங்களை



முன்வைத்துப் பெற்றோரைக் குற்றஞ்சாட்டமாட்டார்கள். அதனினும் முக்கியம், குழந்தைக்கு எவ்விதத் தர மதிப்பீட்டையும் வழங்க மாட்டார்கள்.

ஃபின்லாந்துக் கல்வியியல் அறிஞரான பாசி சாஹ்ல்பர்க் அடிக்கடி சுட்டிக்காட்டும் சமுலி பரோனெனின் வரி இது: 'உண்மையான வெற்றியாளர்கள் போட்டிகளில் மூழ்குவதில்லை!'

ஆசிரியர்களின் பொறுப்புடைமை தொடர்பாக பாசி கூறுவது இது: 'தங்கள் சுயப்பொறுப்புகளை (responsibility) உணராதவர்களிடம் மட்டுமே பொறுப்புடைமை



# ஆச்சரிய வறட்சி...!

பிரணவி

இந்தியாவின் சீராப்பூஞ்சி என்கிற இடம் பலர் அறிந்தது. சீராப்பூஞ்சிதான் உலகிலேயே அதிக மழைவீழ்ச்சி கிடைக்கும் பகுதியாக இருந்தது. சமீபகாலமாகச் சீரப்பூஞ்சியைப் பின்னுக்குத் தள்ளியிருக்கிறது இந்தியாவின் மாசின்ட்றாம் (Māwsynrām, Meghalaya, India) பகுதி.

சீராப்பூஞ்சியை அண்மித்து வடகிழக்கு இந்தியாவின் மேஹாலயாப் பகுதியிலுள்ள இடம்தான் இந்த மாசின்ட்றாம். உலகத்திலேயே அதிக மழை கிடைக்கும் இடமான இதுதான் உலகிலேயே அதிக ஈரமாகவும் இருக்கிறது. இங்கு ஆண்டுக்கு 11 ஆயிரத்து 872 மில்லி மீற்றர் மழை பதிவாகி வருகிறது. சீராப்பூஞ்சியும் சளைத்ததல்ல. அங்கு 11 ஆயிரத்து 777 மிமீ மழை பதிவாகியிருக்கிறது. ஆனால் இவையல்ல ஆச்சரியங்கள். இவ்வளவு மழைவீழ்ச்சியிருந்தும் மாசின்ட்றாம் பகுதியில் நீர்த்தட்டுப்பாடும் வறட்சியும் நிலவுகிறது என்றால் யாருமே நம்ப மாட்டார்கள். ஆனால் அதுதான் உண்மை...!

அதிக மழையிருக்க வறட்சி எப்படி வரும்...? என்கிற கேள்வி உங்கள் மண்டையைக் குடையத் தொடங்கியிருக்கும். வறட்சி என்று குறிப்பிடுவது பாலைவனத் தேசத்தைப்போன்றதாக இல்லாவிடினும் தண்ணீர்த் தட்டுப்பாடு என்ற அளவில் மாசின்ட்றாமில் வறட்சி இருக்கிறது என்பதுதான் உண்மை. அதெப்படி என்று இனிப் பார்ப்போம்.

**தண்ணீர்த் தட்டுப்பாட்டுக்கான காரணம்**

மாசின்றாம் பிரதேசம் மேடான பகுதியாக இருக்கிறது. மலைச்சாரல் என்றும் சொல்லலாம். காசி மலையில் மோதும் மழை மேகங்களாலேயே இந்தப் பகுதியில் அதிக மழை கிடைக்கிறது. அதிகளவில் மழை கிடைத்தாலும் நீர் தேங்குவதற்கோ, நீர் நிலத்தடி

(accountability) கணக்கிடப்பட வேண்டும். எங்கள் ஃபின்லாந்து ஆசிரிய, ஆசிரியைகளைக் கண்காணித்துக் கணக்கிட வேண்டியதில்லை!'

பள்ளிகள் தொடர்பான பார்வை களிலும் ஃபின்லாந்து முற்றிலும் ஏனைய பன்னாட்டுக் கல்வியமைப்பில் இருந்து மாறுபடுகிறது. பள்ளிகளின் செயல்பாடுகள் கூட்டுறவால் நிகழ்பவை என்பதால், ஆசிரியர்களுக்கும் தனித்த அங்கீகாரமோ, தனித்த முத்திரைகளோ வழங்கப்படுவது இல்லை. பள்ளிகளுக்கும் அப்படியே!

அனைத்துப் பள்ளிகளும் சமூகத்தின் அங்கமாக நின்று சமூக மேம்பாட்டிற்கான கருவியாக இயங்க வேண்டும் என்பதால், பள்ளிகள் இடையே போட்டி மனப்பான்மையை உருவாக்குவதில்லை என்கிறார்கள் ஃபின்லாந்துக் கல்வித் துறையினர்.

**ஃபின்லாந்துக் கல்வித் துறையின் கூர்நோக்கு**

சமூக ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து சமத்துவச் சமூகம் படைப்பதைப் பள்ளிக் கல்வி மையப்படுத்தி நிற்பதால், பின்வரும் விஷயங்கள் கடமைகளாகக் கருதப்படுகின்றன.

அனைவருக்குமான கட்டணமில்லா உணவு.

அனைத்துக் குழந்தைகளுக்குமான உடல் நிலையைக் கண்காணிக்க மருத்துவக் கட்டமைப்பு.

உளவியல் மேம்பாடு மற்றும் ஆலோசனை வகுப்புகள்.

மாணவ, மாணவிகளுக்குத் தனித்தனியான வழிகாட்டுதல்.

கட்டாயக் கல்வி 7 வயது முதல் 16 வரை என்பதால் முற்றிலும் கட்டண மில்லா கல்வி.

எல்லாப் பெற்றோர்களுமே அருகிலுள்ள பள்ளிகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதால், குழந்தைகள் பஸ்ஸில் ஏறி பயணப்படும் துன்பம் இங்கே இல்லை. மதியம் 2:00 - 2:45 மணிக்கெல்லாம் பள்ளிகளின் செயற்பாடுகள் நிறை வடைந்துவிடுவதால், மாலை நேரத்தை உற்சாகமாக விளையாட்டுக்குக் குழந்தைகள் செலவிடுகிறார்கள். குழந்தை களின் 1ஆம் வகுப்பு முதல் 6ஆம் வகுப்பு வரையிலான தொடர் கற்றலுக்கு ஒரே ஆசிரியர் இருப்பதால், குழந்தைகளின் தொடர் செயற்பாடுகள் கண்காணிக்கப்பட்டு, அவரவருக்கு ஏற்ற உளவியல், தனித்திறன், கல்விக் கற்றல் பயிற்சிகளைப் பெறுகிறார்கள். 7 முதல் 13 வயது வரை ஒன்றாகப் பய ணிக்கும் ஆசிரியர் ஒவ்வொரு குழந்தைக ளுக்கு குடும்ப உறுப்பினர்போல மாறிவிடு கிறார்.

இப்படியாக ஆசிரியர் என்பவர் குழந்தைகளுக்கான முழுமையான வழிகாட்டியாகவும் செயல்படுகிறார்.



நீராகுவதற்கோ தரைத்தோற்ற அமைப்பில்லை. பெய்யும் அவ்வளவு மழை நீரும் வழிந்தோடி விடுகிறது. தரைக்கீழ் நீர் என்ற பேச்சுக்கே அங்கு இடமில்லை. இதனால் மழை பெய்யும்போது நீரைப் பெற்றுவிட வேண்டும். வருடத்தில் அதிக நாள்கள் மழை பெய்வதால் மழைமூலம் நீரைப் பெறக்கூடிய வசதி அங்கிருக்கிறது. ஆனால் சேமிக்க முடியாது. குடிதண்ணீர்த் தேவை போக ஏனைய தேவைகளுக்கு நீர்த் தட்டுப்பாடு நிலவுகிறது.

**அதிக மழையால் ஆபத்து**

அதிகளவில் மழை பெய்து கொண்டேயிருப்பதால் அந்தப் பகுதியில் பயிர்ச் செய்கைகள் சாத்தியமில்லாமல் இருக்கின்றன. மேடான பகுதியில் மழை பெய்து நீர் வழிந்தோடிக் கொண்டேயிருப்பதால் மண் வளம் பாதிக்கப்படுகிறது. தொடர்ச்சியான மழையால் மண்ணரிப்பு ஏற்பட்டு மண்வளம் இழக்கப்படுகிறது. இதனால் பயிர்ச்செய்கை பாதிக்கப்படுகிறது. இதனால் நீர்த் தேவைக்குக் கஸ்ரப்படுவதுடன் விவசாயத்தில் ஈடுபட முடியாத சூழலுக்கும் அந்தப் பகுதிவாழ் வாசிகள் முகம்கொடுக்கின்றனர். ஆச்சரியத்தைப் பாருங்கள்...! அதிக மழை கிடைக்கிறது... ஆனால் நீருக்குத் தட்டுப்பாடு. அதிக மழை கிடைக்கிறது... ஆனால் விவசாயம் செய்வதில் சிரமம். சித்திரை, வைகாசி மாதங்களில் தொடங்கி ஐப்பசி மாதம் வரையில் தொடர்ச்சியாக மழை கிடைக்கும் மாசின்ட்றாம் பிரதேசம் அதிக மழையால் பாதிக்கப்பட்டுள்ளது என்பதுதான் இதன் பின்னாலுள்ள உண்மை. எதுவும் அளவோடிருந்தால்தான் நல்லது.

---

# வாரம் ஒரு சொல்....!

17

## துழாவுதல்

இந்தச் சொல் யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் வினைச்சொல்லாகப் பயன்படுத்தப்படுகிறது. வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்பட் டாலும் கலக்குதல், அலசி ஆராய்தல், இருட்டில் தேடுதல் எனப் பல அர்த்தங்களில் பயன்படுத்தப்படுகிறது.

"கறியை ஒருக்காத் துழாவி விடு"

"பாதாளக் கரண்டியைப் போட்டுத் துழாவினால் கிணற்றுக்குள் விழுந்த வாளியை எடுக்கலாம்"

"அவள் வைக்கிற கறியில் குழம்புக்குள்ள துழாவித்தான் மீன் துண்டை எடுக்கவேணும்"

"அவன் போனால் எல்லாரிட்டையும் துழாவி உண்மையை எடுத்துப் போடுவான்"

"அவன் சும்மா துழாவிக்கொண்டு திரிவான் ஆளிலை விசயமில்லை"

"உந்த விசயத்தைத் திரும்பத் திரும்பத் துழாவி என்னத்தைக் காணப் போறாய்...?"

துழாவுதல் என்ற சொல் இவ்வாறாகப் பல அர்த்தங்களில் பயன் பட் டாலும் உச்சரிக்கும்போது துலாவுதல் அல்லது துளாவுதல் என்பதாகவே உச்சரிப்புப் பழக்கம் பல கிராமங்களிலும் இருக்கிறது. ஆனால், துலா என்பது நீர் இறைக்கும் தூலக்கட்டை அல்லது துலாக்கோலைக் குறிக்கிறது. துலா ராசி, துலாம் என்றும் குறிப்பிடப்படுகிறது. மற்றும்படி மேற்கண்ட அர்த்தங்களில் வரும் சொல் துழாவுதல் என்பதே சரியானது.

# இயற்கையுடனான மனித விளையாட்டு ஷரம் எல் ஷேக் மாநாட்டின் முக்கியத்துவம்

**எஸ்.சந்திரசேகர்**

2022இல் மூன்றில் ஒரு பங்கு பாகிஸ்தான் வரலாறு காணாத வெள்ளத்தில் மூழ்கியது. ஜப்பானில் அடுத் தடுத்துக் கடுமையான புயல்கள். ஐரோப்பாவில் 500 ஆண்டுகள் இல்லாத வறட்சி. பிலிப்பைன்ஸில் இதுவரை இல்லாத அளவுக்குக் கடுமையான புயல்கள். கலிஃபோர் னியாவின் காட்டுத் தீ ஏற்படுத்திய சேதம் மிக அதிகம். இப்படி இயற்கைப் பேரிடர்களை இந்த ஆண்டில் நீள மாகப் பட்டியல் இடலாம். இவை அனைத்தும் வழக்க மான இயற்கைச் சீற்றங்கள் என்று எளிதில் கடந்து போக முடியாது. ஏனென்றால், இவை அனைத்துக்கும் மனிதர் களால் ஏற்படுத்தப்பட்ட காலநிலை மாற்றமும் ஒரு காரணம் என்பதை உறுதியான தரவுகள் சொல்கின்றன.

சென்ற 10 ஆண்டுகளில் மட்டுமே இந்த மாதிரியான இயற்கைச் சீற்றங்களின் தீவிரமும் அதன் விளைவான அடுக்கு நிகழ்வுகளும் மிக வேகமாக அதிகரித்துள்ளன. இதே நிலை தொடர்ந்தால் 2050 வாக்கில் உலகில் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் இயற்கைச் சீற்றங்களால் சுமார் 23 டிரில்லியன் டொலர் அளவுக்குப் பொருளாதாரச் சேதமும் இதற்கு இணையாக மனித உயிரிழப்பும் இருக் கும் என்று கூறுகிறது உலகப் பொருளாதார மன்றத்தின் ஆய்வறிக்கை.

**இதற்கு என்ன காரணம்?**

18ஆம் நூற்றாண்டிலிருந்து தொழில் புரட்சியின் காரணமாக நிலக்கரியின் பயன்பாடு அதிகரித்தது. மேலும், 20ஆம் நூற்றாண்டிலிருந்து கச்சா எண்ணெய் பயன்பாடும் அதிகரித்தது. இவை இரண்டுக்கும் புதைபடிவ எரிசக்தி என்று பெயர். இந்தப் புதைபடிவ எரிசக்தியைப் பயன்படுத்தும்போது இதிலிருந்து வெளிப் படும் பசுங்குடில் வாயுக்கள் வளிமண்டலத்தை வெப்பப் படுத்துகின்றன. இதன் காரணமாக ஏற்படும் காலநிலை மாற்றமானது, இயற்கைச் சீற்றங்கள் உண்டாக்கும் சேதத்தை அதிகமாக்குகின்றன. 1988இல் காலநிலை மாற்றத்துக்கான பன்னாட்டுக் குழு (IPCC) ஏற்படுத்தப் பட்டது. புவி வெப்பமாதலால் உலகில் ஏற்படும் கால நிலை மாற்றங்கள் குறித்து அறிவியல் அடிப்படையில் ஆய்ந்து அதன் மதிப்பீடு, தாக்கம், அதற்கான தீர்வுகள் போன்றவற்றைப் பற்றி 6-7 ஆண்டுகளுக்கு ஒருமுறை பன்னாட்டு அரசுகளுக்கு அறிக்கை அளிப்பதுடன், எச்சரிக்கை செய்வதே இந்த அமைப்பின் நோக்கமாகும்.

இதன்படி முதன் முதலாக 1990இல் வெளியிட்ட ஆய்வறிக்கையின் விளைவாக ஐநா அவையின் கீழ் காலநிலை மாற்றத்துக்கான சர்வதேச ஒப்பந்தம் (United Nations Framework Convention on Climate Change) 1992இல் போடப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் கீழ் ஏற் படுத்தப்பட்ட 1997 கியோட்டோ ஒப்பந்தத்தின்படி, 2005 தொடங்கி 2012க்குள் முன்னேறிய நாடுகள் 1990இல் வெளியிட்ட பசுங்குடில் வாயுக்களின் அளவிலிருந்து 5% குறைக்க வேண்டும் என்ற இலக்கு நிறுவப்பட்டது. அதன்படி பெரும்பான்மையான வளர் ந்த நாடுகள் தங்களின் பசுங்குடில் வாயுக்களின் அள வைக் குறைத்துள்ளன. ஆனால், அமெரிக்கா உள்ளிட்ட வளர்ந்த நாடுகளில் சில இந்தப் பசுங்குடில் வாயுக்களின் அளவைக் குறைப்பதற்கான கடமையைக் கை கழுவி விட்டன.

இந்நிலையில் 2009இல் சீனா பசுங்குடில் வாயுக்களை



வெளியிடுவதில் முதல் இடத்தைப் பிடித்தது. அதுவரை அமெரிக்காதான் பல ஆண்டுகளாக முதல் இடத்தில் இருந்தது. இந்தத் தருணத்தில் 2009இல் கோப்பென்ஹேகன் நகரில் நடைபெற்ற காலநிலை மாற்றத்துக் கான மிகவும் முக்கியத்துவம் வாய் ந்த உச்சி மாநாட்டில் (COP 15) கேப்பென்ஹேகன் ஒப்பந்தம் போடப் பட்டது. அதன்படி கீழ்க்கண்ட முடி வுகள் எடுக்கப்பட்டன.



முதலாவது, 1997இல் கையொப் பம் இட்டு 2005இல் நடைமுறைப் படுத்தப்பட்ட கியோட்டோ ஒப்பந் தத்தை 2012க்குப் பிறகும் தொடர் வது என்பது. இரண்டாவது, வளர்ந்த நாடுகளின் பங்களிப்பில் 'பசுமை காலநிலைக்கான நிதி' (Green climate Fund) என்று அழைக்கப்படும், காலநிலை மாற்றத்தைத் தடுக்க உதவும் சர்வதேச நிதி அமைப்பை உருவாக்குவது. அதன்படி வளர்ந்த நாடுகள் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 100 பில்லியன் டொலர் அளவுக்கு நிதியை இந்த அமைப்புக்கு வழங்க வேண்டும். இந்த நிதியை வளரும் நாடுகளும் பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ள நாடுகளும் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் விளைவுகளை எதிர்கொள்ளவும், தங்களின் பசுங்கு டில் வாயுக்களின் அளவைக் குறைக் கவும் பயன்படுத்திக்கொள்ளும். மூன்றாவதாக, புவியின் சராசரி வெப்பநிலையைத் தொழில் புரட் சிக்கு முன்பு இருந்ததைவிட - அதா வது, 1.5 டிகிரி செல்சியஸுக்கு - மிகாமல் இருக்க வேண்டும் என்ற இலக்கும் நிர்ணயிக்கப்பட்டது.

**நாடுகளுக்கான இலக்கு**

இதைத் தொடர்ந்த ஆண்டுகளில் வளரும் நாடுகளும் தங்களின் பசுங் குடில் வாயுக்களின் அளவைப் பெரும் அளவில் குறைக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. அப்போது இந்தியா, பிரேசில், சீனா, தென்னாப் பிரிக்கா போன்ற வளரும் நாடுகள் இதற்குக் கடும் எதிர்ப்பு தெரிவித்தார் கள். இந்தியாவின் வாதம், வளரும் நாடுகளின் எண்ண ஓட்டத்தைப் பிரதிபலிப்பதாக இருந்தது. பசுங்கு டில் வாயுக்களின் அளவைப் பெரும் அளவில் குறைக்க வேண்டும் என்ற வேண்டுகோளை முக்கியமான மூன்று காரணங்களுக்காக இந்தியா முதலில் நிராகரித்தது.

முதலாவதாக, பொருளாதார வளர்ச் சியில் பிரதிநிதித்துவம். அதாவது, சுமார் 250 ஆண்டுகள் தொடர்ந்து புதைபடிவ எரிபொருள்களைப் பயன் படுத்தியதன் விளைவாக ஐரோப்பிய நாடுகளும் இதர மேற்கத்திய நாடுக ளும் பொருளாதாரத்தில் பெரும் வளர்ச்சியைக் கண்டுள்ளன. ஆனால், இந்தியா போன்ற வளரும் நாடுகள் கடந்த சில தசாப்தங்கள் மட்டுமே புதைபடிவ எரிபொருள்களை அதிக மாகப் பயன்படுத்துகின்றன. இத னால் இவர்களால் மேற்கத்திய நாடு கள் அடைந்த அளவுக்குப் பொருளா தார வளர்ச்சியை அடைய முடிய வில்லை.

மேலும் இந்தியாவில் மட்டும் சுமார் 30 கோடி மக்கள் வறுமைக் கோட் டுக்குக் கீழே வாழ்கிறார்கள். இந்த 30 கோடி மக்களின் வறுமையை அகற்ற வேண்டுமென்றால் அவர்களின் முன்னேற்றத்துக் கான வாய்ப்புகளை முதலில் வழங்கவேண்டும். குறிப்பாக, வேலைவாய்ப்புகள், தொழிற் சாலைகள் போன்றவற்றை ஏற்படுத்த வேண்டும். இதற்கு முதன்மையானது மின்சாரம்.



**எரிபொருள் எனும் மூலாதாரம்**

இந்தியா போன்ற வளரும் நாடுகள் நிலக்கரியைக் கொண்டே தங்களுக்குத் தேவையான மின் சாரத்தைத் தயாரிக்க முடியும். ஏனென்றால், சூரிய ஒளி அல் லது காற்றாலை மின்சாரம்

போன்ற மாற்று எரிசக்தியைத் தயாரிக்க அதிக முதலீடு களும் முன்னேறிய தொழில் நுட்பங்களும் தேவைப்படும். இந்தியா போன்ற வளரும் நாடுகளால் இந்த மாதிரியான எரிசக்தி வளங்களை எளிதில் ஏற்படுத்த முடியாது. அதற் கான பொருளாதார வசதியோ தொழில்நுட்ப வசதியோ இந்தியாவிடம் போதிய அளவுக்கு இல்லை.

**“2019 இறுதியில் ஏற்பட்ட கொரோனா பெருந்தொற்று காலநிலை மாற்றத்துக்கு எதிரான போரை விரைவுபடுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்த்தியது”**

இரண்டாவதாக, தனிநபர் பசுங்குடில் வாயு வெளியீடு. அதாவது, ஒரு தனிநபரால் ஒரு ஆண்டுக்குள் வெளி யிடப்படும் பசுங்குடில் வாயு வின் அளவு. இந்த அளவு ஒவ்வொரு நாட்டுக்கும் இடையே மாறுபடும். 2009இல் உலக சராசரி தனிநபர் பசுங்குடில் வாயு வெளியீடு சுமார் 4.1 மெட்ரிக் டன்னாக இருந்தது. சீனாவின் அளவு உலக சராசரியை ஒட்டி இருந்தது. அதேசமயம் மேற்கத் திய நாடுகளின் தனிநபர் பசுங்குடில் வாயு வெளியீடு சுமார் 20 மெட்ரிக் டன் அளவைவிட அதிகமாக இருந் தது. ஆனால், இந்தியாவின் தனிநபர் வெளியீடு 1.4 மெட்ரிக் டன் மட்டுமே. இவ்வளவு குறைவான தனிநபர் பசுங்குடில் வாயு வெளியீடு இருந்தும் பசுங்குடில் வாயுக் களை அதிக அளவில் வெளியிடும் நாடுகளின் பட்டி யலில் இந்தியா மூன்றாவதாக இருப்பதற்கு இந்தியாவின் மக்கள்தொகை மட்டுமே காரணம்.

மூன்றாவது, மனிதவள மேம்பாடு. அதாவது, ஐநா அவையினால் வெளியிடப்படும் மனிதவள மேம்பாட்டுக் குறியீடு பட்டியலில் இந்தியா போன்ற வளரும் நாடுகள் மிகவும் பின்தங்கியுள்ளன. இந்தப் பட்டியலில் ஐரோப் பிய நாடுகள் அளவுக்கு மனித வளத்தில் இந்திய மேம் பட வேண்டும் என்றால் தனிநபர் எரிசக்தி நுகர்வு அதி கப்படுத்தப்பட வேண்டும். அதாவது, ஒரு தனிநபர் ஒரு ஆண்டுக்கு 4 டன் கச்சா எண்ணெய்க்கு இணை யான எரிசக்தியைப் பயன்படுத்தினால் மட்டுமே மனித வளக் குறியீட்டில் 0.9க்கு மேல் பெற்று, வளர்ந்த நாடு களின் பட்டியலில் சேர முடியும்.

ஆனால் இந்தியாவின் தனிநபர் எரிசக்தி நுகர்வு ஆண்டுக்கு 1.88 டன் கச்சா எண்ணெய்க்கு இணையான எரிசக்தி மட்டுமே. எனவே, வளர்ந்த நாடுகளுக்கு இணை யாக இந்திய போன்ற வளரும் நாடுகள் பசுங்குடில் வாயு வெளியீட்டைக் குறைக்க முடியாத சூழ்நிலையில் தற் போது உள்ளன.

இந்த எண்ணிக்கைப் புள்ளிகளில் மாற்றத்தைத் தவிர, இலங்கை போன்ற ஏனைய வளரும் நாடுகளின் நிலை யும் இதுவே. அதனால்தான் இலங்கை அரச தலைவர் அண்மையில் நோர்வே அரசியல்வாதியான எரிக் சொல் கெய்மை சுற்றுச்சூழல் தொடர்பான ஆலோசகராக நிய மித்தார்.

இதில் முக்கியமாகக் கவனத்தில்கொள்ளவேண்டியது என்னவென்றால் கடந்த 250 ஆண்டுகளில் தங்குதடை யில்லாமல் புதைபடிவ எரிபொருள்களைப் பயன்படுத்தி வரும் சில மேற்கத்திய நாடுகள் பசுங்குடில் வாயுக்களின் வெளியீட்டைக் குறைப்பதற்கான சில சர்வதேச ஒப்பந் தங்களையே ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், பசுங் குடில் வாயுக்களின் வெளியீட்டைக் குறைக்க வேண்டும் என்று இந்தியா போன்ற வளரும் நாடுகளை அந்த நாடுகள் தொடர்ந்து வலியுறுத்திவருகின்றன.

**முந்தைய மாநாடுகளின் அனுபவம்**

பாரீஸ் நகரில் 2015இல் நடைபெற்ற காலநிலை மாற் றத்துக்கான 21ஆவது உச்சி மாநாட்டில் வரலாற்றுச் சிறப்புமிக்க சர்வதேச ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தானது. இது காலநிலை மாற்றத்துக்கான பாரீஸ் ஒப்பந்தம் என்று அழைக்கப்பட்டது. இதன்படி முதலாவதாக, உலக சராசரி வெப்பநிலை அதிகரிப்பைத் தொழில் புரட்சிக்கு முன்பு இருந்ததைவிட 1.5 அல்லது 2 டிகிரி செல்சி யஸுக்குள் கட்டுப்படுத்த வேண்டும்.

இதற்காகக் காலநிலை மாற்றத்துக்கான ஐநா அவை யின் சர்வதேச ஒப்பந்தத்தில் உறுப்பினர்களாக உள்ள அனைத்து நாடுகளும் தனித்தனியே இலக்குகளை நிர் ணயித்து அடைய வேண்டும் என்று ஒருமனதாக ஏற் றுக்கொள்ளப்பட்டது. இது ‘ஐஎன்டிசி’ (INDC- Intended Nationally Determined Contribution) என்று அழைக் கப்பட்டது. பாரீஸ் ஒப்பந்தத்துக்கும் முந்தைய ஒப்பந் தங்களுக்கும் இடையே முக்கியமான வேறுபாடு ஒன்று உண்டு. உதாரணமாக, கியோட்டோ ஒப்பந்தத்தின்படி வளர்ந்த நாடுகள் மட்டும் பசுங்குடில் வாயுக்களின் வெளி யீட்டைக் கட்டாயமாகக் வெளியீட்டைக் குறைக்க வேண்டும். ஆனால், பாரீஸ் ஒப்பந்தத்தின்படி அனைத்து நாடுகளும் தன்முனைப்பாகப் பசுங்குடில் வாயுக்களின் வெளியீட்டைக் குறைக்க வேண்டும்.

இதேபோல, அனைத்து உறுப்பு நாடுகளும் அவர்கள் நிர்ணயித்த இலக்கை எவ்வளவு அடைந்துள்ளார்கள் என்பதை அறிவதற்காக உலக அளவில் இருப்புக் கணக் கெடுப்பு நடத்தப்படும். காலநிலை மாற்றத்துக்கான பாரிஸ் ஒப்பந்தத்தின்படி ஒவ்வொரு நாடும் தன்முனைப்பாக தீர்மானித்த இலக்குகளைக் கட்டாயமாக அடைய வேண்டும் என்ற நிர்பந்தம் இல்லை.

அடுத்ததாக, காலநிலை மாற்றத்துக்கான பாரீஸ் ஒப் பந்தத்தின்படி இந்த நூற்றாண்டின் பாதியில் கார்பன் டை ஆக்சைடு வெளியீடு நிகர பூஜ்யமாக இருக்க வேண் டும் என்று வலியுறுத்தப்பட்டது. இதை எட்டுவதற்குப் பெரும்பாலான வளர்ந்த நாடுகள் தங்களின் கார்பன் டை ஆக்சைடு வெளியீட்டை 2030க்குள் நிகர பூஜ்யத் துக்குக் கொண்டுசெல்ல வேண்டும். சீனா ஏற்கெனவே நிகர பூஜ்யம் அல்லது கார்பன் சமநிலைமையை 2060 க்குள் அடைந்துவிடுவோம் என்று கூறியுள்ளது.

இந்தியா 2070ஆம் ஆண்டை இலக்காக வைத்துள்

ளது. அமெரிக்கா 2050ஆம் ஆண்டை கார்பன் சம நிலை ஆண்டாக அறிவித்துள்ளது. அதிக அளவில் பசுங் குடில் வாயுக்கள் வெளியிடும் நாடுகளின் பட்டியலில் இந்த மூன்று நாடுகளும் முதல் மூன்று இடங்களைப் பிடித் துள்ளன. இன்னும் சொல்ல வேண்டுமானால் இந்த மூன்று நாடுகளும் சேர்ந்து மொத்த கார்பன் டை ஆக் சைடு வெளியீட்டில் 52% பங்களிக்கின்றன. ஆனால், கடந்த 250 ஆண்டுகளாக வெளியிடப்பட்ட ஒட்டுமொத்த கார்பன் டை ஆக்சைடு வெளியீட்டில் இந்தியாவின் பங்கு வெறும் 4% மட்டுமே.

**கொரோனா சுட்டிய அவசியம்**

2019 இறுதியில் ஏற்பட்ட கொரோனா பெருந்தொற்று காலநிலை மாற்றத்துக்கு எதிரான போரை விரைவுபடுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்த்தியது. அதன் பின்பு 2021இல் பிரிட்டனின் கிளாஸ்கோ நகரில் காலநிலை மாற்றத்துக்கான ஐநா ஒப்பந்தத்தின் 26வது மாநாடு (COP 26) நடைபெற்றது. இதில் பல்வேறு முடிவுகள் எடுக்கப்பட்டன. இந்த மாநாட்டில் புதைபடிவ எரிபொருள் களுக்கு வழங்கப்படும் மானியங்களைக் குறைப்பது பற்றி விவாதிக்கப்பட்டது. நிலக்கரிப் பயன் பாடு முற்றி லும் தவிர்க்கும்படி இந்த மாநாட்டில் ஒப் பந்தம் தயா ரானது. ஆனால், இந்தியாவின் வேண்டு கோளை ஏற்று நிலக்கரிப் பயன்பாட்டை முற்றிலும் தவிர்ப்பதற்குப் பதி லாக நிலக்கரிப் பயன்பாடு படிப்படி யாகக் குறைக்கப்படும் என்று முடிவு செய்யப்பட்டது.

ஆனால், தற்போது நடைபெற்றுவரும் ரஷ்யா - உக் ரைன் போர் காரணமாக ரஷ்யா மீது பொருளாதார தடை விதிக்கப்பட்டது. இதனால் ஐரோப்பிய நாடுகள் ரஷ்யா வின் எரிவாயுவைப் பயன்படுத்த முடியாத சூழ்நிலை உள்ளது. ஆகவே, ஐரோப்பிய நாடுகள் தங்களின் எரி சக்தித் தேவையைப் பூர்த்திசெய்துகொள்வதற்கு மீண்டும் நிலக்கரியைப் பயன்படுத்தும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள னர். காலநிலை மாற்றத்துக்கு எதிரான நடவடிக்கையில் சற்று தேக்கம் ஏற்பட்டிருப்பதற்கு இதுவும் ஒரு காரணம்.

2021இல் காலநிலை மாற்றத்துக்கான பன்னாட்டு அரசுக் குழுவின் 6வது ஆய்வறிக்கை வெளியிடப்பட்டது. இதன்படி இதுவரை மொத்தமாக 2,390 ஜிகா டன் கார் பன் டை ஆக்சைடு வெளியிடப்பட்டுள்ளது. இதனால் உலக சராசரி வெப்பநிலையானது தற்போது 1.1 டிகிரி செல்சியஸ் அளவுக்கு உயர்ந்துள்ளது. இதை 1.5 டிகிரி செல்சியஸுக்குள் கட்டுப்படுத்த வேண்டும் என்றால் இனி வரும் ஆண்டுகளில் மொத்தமாக 500 ஜிகா டன் அளவு கார்பன் டை ஆக்சைடு மட்டுமே வெளியிடப்படவேண்டும். இதற்கு கார்பன் பட்ஜெட் என்று பெயர்.

தற்போதைய நிலை தொடர்ந்தால் இன்னும் 6 அல்லது 8 ஆண்டுகளில் இந்த 500 ஜிகா டன் அளவு கார்பன் டை ஆக்சைடு அளவை நாம் தாண்டிவிடுவோம். அப் படி நடந்தால் மனிதர்களால் நினைத்துப் பார்க்க முடி யாத, மனிதர்களால் எதிர்கொள்ள முடியாத, பெரும் பேர ழிவுகள் தினந்தோறும் ஏற்படும். மனிதர்களும் உயிரி னங்களும் வாழ்வதற்கு ஏற்ற இயற்கைச் சூழலை மீட்டெ டுக்க முடியாத நிலையை இந்தப் புவிக்கோள் அடைந்து விடும்.

இந்த நிலையில்தான் எகிப்தின் ஷரம் எல் ஷேக் நகரில் ஐநா அவையினால் நடத்தப்படும் உலகக் கால நிலை மாற்றத்துக்கான உச்சி மாநாடு (UNFCCC- COP 27) முக்கியத்துவம் பெறுகிறது. ரஷ்யா - உக்ரைன் போர், உலகப் பொருளாதார மந்தநிலை, கரோனா பெருந்தொற் றுக்கு பிந்தைய நிலை போன்ற பல்வேறு அரசியல், பொருளாதாரக் காரணங்களால் இந்த உச்சி மாநாடு பெரும் எதிர்பார்ப்பை உண்டாக்கியுள்ளது. இதில் கீழ்க் காண்பவை தொடர்பில் முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கலாம்.

காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்குக் கடு மையான உறுதிப்பாட்டை எடுத்தல்.

காலநிலை மாற்றத்தால் ஏற்படும் இழப்புக்கும் சேதத் துக்கும் உரிய இழப்பீட்டை வளர்ந்த நாடுகள் வழங்கும் விதமாக முடிவெடுத்தல்.

காலநிலை மாற்றத்துக்கு ஏற்றாற்போல் வளரும் நாடுக ளும் பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடுகளும் தங்க ளைத் தகவமைத்துக்கொள்ளுதல்,

இதற்கெல்லாம் பரிகாரமாக வளர்ந்த நாடுகள் தாங்கள் ஏற்கனவே உறுதியளித்ததுபோல சுமார் 100 பில்லியன் டாலர் நிதி உதவியை வளரும் நாடுகளுக்கும் பொருளா தாரத்தில் பின்தங்கிய நாடுகளுக்கும் ஒவ்வொரு ஆண் டும் அளிக்க வேண்டும்.

இலக்குகளில் எவ்வளவு சாத்தியம் ஆகும் என்பது தெரிய வில்லை. ஆனால், மனித சமூகத்தைக் காப்பாற்றக் கிடைத்த முக்கியமான வாய்ப்புகளுள் ஒன்றாக இந்த மாநாட்டை உலக நாடுகள் கருத வேண்டும். இல்லையென்றாலும், இயற்கைச் சூழல் தன்னைத்தானே சமநிலைப்படுத்திக்கொள் ளும். ஆனால், அதற்குள் எவ்வளவு சேதமும் இழப்பும் ஏற்பட்டிருக்கும் என்பதை நம்மால் கற்பனை செய்துகூட பார்க்க முடியாது!



# கண்டறியாத கதைகள்

10



யசோமாமி



வணக்கம் மருமக்களே!

எல்லோரும் எப்படி இருக்கிறீர்கள்? மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா? பாடசாலையில் ஆசிரியர் சொல்லித்தரும் பாடங்களை விருப்பத்தோடு கேட்டு புரிந்து கொள்கிறீர்களா?

நல்லது. இன்று உங்களுக்கு இயற்கை உருவாக்கி வைத்திருக்கிற அழகான ஒரு விடயத்தைப் பற்றிச் சொல்லப் போகிறேன். நீங்கள் வாழும் நாட்டில் கோடை, மாரி என்று இரண்டு காலங்கள் இருக்கிறதல்லவா? கோடை காலத்தில் அதிக வெப்பமாக இருக்கும். மாரிகாலத்தில் அதிகம் மழைபெய்யும் என்று நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

ஆனால் அவுஸ்ரேலியாவில் அது மாதிரி நான்கு காலங்கள் உள்ளன. ஏன் அவ்வாறு இருக்கிறது என்பது பற்றி முன்னர் ஒரு தடவை உங்களுக்குக் கூறியது நினைவிருக்கலாம். அந்த நான்கு காலங்களும் என்ன என்ன என்று சொல்லுங்கள் பார்க்கலாம்?

அவை கோடை காலம், இலை உதிர்காலம், குளிர் காலம், வசந்த காலம் என்பவையாகும்.

இப்போது இங்கு வசந்த காலம் தொடங்கி இருக்கிறது. அது எப்படி இருக்கும் என்று இன்றைக்குப் பார்ப்போமா?

இப்போது எங்கு பார்த்தாலும் மரங்கள் எல்லாம் பூக்கள் பூத்துக் குலுங்குகின்றன. பறவைகள் பாடித் திரிகின்றன. பறவைகள், விலங்கினங்களுக்கும் இது இனப்பெருக்க காலம். சூரியனின் வெப்பமும் காற்றின் இளம் குளிர் தென்றலுமாக சூழல் மிக ரம்ய மாக இருக்கிறது. நாட்களும் பொழுதுகளும் மிக அழகாக இருக் கின்றன. உங்களைப் போன்ற பள்ளி மாணவர்களுக்கு இப்போது இங்கு வசந்தகால விடுமுறை. அதனால் குடும்பம் குடும்பமாக மக் கள் பூங்காக்களிலும் சோலைகளிலும் ஆற்றங்கரையோரங்களிலும் புல்வெளிகளிலும் பாய் விரித்து உட்கார்ந்து இயற்கையின் எழிலை கண்டு ரசிக்கிறார்கள். உணவுப் பதார்த்தங்களை உண்டு மகிழ்கிறார்கள்.

பிள்ளைகள் ஓடி விளையாடுகிறார்கள். சிறுவர்கள் சைக்கிள் மற்றும் ஸ்கேற்றிங் ஓட்டி விளையாடுகிறார்கள். பெரியவர்கள் நண்பர்களோடு உறவாடி மகிழ்கிறார்கள். பெற்றோர் பார்த்திருக்க பச்சைப் புல்வெளிகளில் குழந்தைகள் தவழ்ந்து திரிகிறார்கள். நீரோடைகளில் கறுப்பு அன்னங்களும் வெள்ளை அன்னங்களும் அருகருகாக நீந்திச் செல்லும் காட்சி அழகாக இருக்கிறது. பூக்களோ பூங்காக்களில் பூத்துக் குலுங்குகின்றன.

இனி, வீதி யோரங்களில் Street festival என்று சொல்லும் கொண்டாட்டங்களுக்குக் குறைவிருக்காது. அவுஸ்திரேலிய நாடு பல்கலாசார நாடு என்பதால் பல இன, மொழி,பண்பாட்டு மக்களும் கூடி இணக்கமாக வாழ்கிறார்கள். அதனால் பல்வேறுவிதமான உணவுகளையும், உடை அலங்காரங்களையும் பல்வேறு ரகமான நாம் கண்டும் கேட்டும் அறிந்திராத வாத்திய இசைகள், ஆடல் பாடல்களை அறியவும், கேட்கவும் பார்க்கவுமான வாய்ப்புகள் இங்கு அதிகம் உள்ளன. அரசே அவற்றுக்கு பெருமளவிலான ஆதரவினைத் வழங்குகிறது. மக்கள் எல்லோரும் அன்பு, புரிந்துணர்வு, நல்லிணக்கம் இவற்றோடு வாழவும் தத்தம் கலாசார பண்பாட்டு

விழுமியங்களை தாமும் கொண்டாடி மற்றய சமூகத்தவருக்கும் அறிமுகப்படுத்தவும் அரசு மக்களை ஊக்குவிக்கிறது.

வீதிக் கொண்டாட்டங்களின் போது வீதியருகில் கூடாரங்கள் அமைத்து வீதியை மறித்து மேடை அமைத்து கொண்டாட்டங்கள் தொடங்கும். உடனடியாகச் செய்து விற்பனையாகும் உணவு வகைகளும் மேடைகளில் பல்வேறு இனத்தவரின் ஆடல்,பாடல், வாத்திய இசை என்பனவும் பல்வேறு இனத்தாரின் பாரம்பரிய பொருள் விற்பனையும் என்று வீதியெல்லாம் களைகட்டும். உள்ளூராட்சி நகர சபைகள் இவற்றினை ஏற்பாடு செய்கின்றன.

உங்களுக்கு இன்னொரு விடயம் தெரியுமா? இம்மாதம் இந்துக்கள் கொண்டாடும் தீபாவளி மாதமல்லவா? அதனால் parra masala என்ற பெயரில் Parramatta என்ற இடத்தில் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய மூன்று தினங்களிலும் பெரும் செலவில் அரச ஆதரவோடு வருடாந்தம் நிகழ்ச்சிகள் இலவசமாக நடந்தேறும். நகரம் மிக அலங்காரத்தோடும், பூச்சரங்களோடும், வண்ணமயமான மின்விளக்குகளோடும், விழாக்கோலம் பூண்டிருக்கும். ரயில், பஸ் நிலயங்களில் இருந்து இந்த இடத்துக்குப் போவதற்கான வழிகாட்டி படங்களை முன்கூட்டியை நடைபாதைகளில் ஒட்டி விட்டிருப்பதால் யாரும் இலகுவாக இந்த இடத்தை வந்தடைந்துவிடுவார்கள். ஆங்கிலேய ஆண்பெண் பாலரும் இந்திய பாரம்பரிய உடைஉடுத்தி வருவதும் போவதும்கூடக் காணக் கிடைக்கும். எங்கும் மகிழ்ச்சியும், புன்னகையும் இணக்கப் பாடுகளும் இந்நாட்டை இன்னும் அழகாக்கும்.



இந்நாட்களில் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் இருந்தும் கலைஞர்கள் வந்து நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வார்கள். ஒரே நேரத்தில் அருகருகாக பல நிகழ்வுகள் நடக்கும். பெரியமேடையில் இசைநிகழ்ச்சி பல்வேறு வாத்திய விருந்து என்பன மாறி மாறி நடந்து கொண்டிருக்கும். இன்னொரு இடத்தில் ஆடல் நிகழ்ச்சி நடக்கும். கிராமிய நடனம் இந்தியவின் பல்வேறு மாநிலங்களுக்குமுரிய பாரம்பரிய நடனங்கள் ஒருபுறம் நடக்கும். இன்னோர் அரங்கில் கலைப்படங்கள், குறும்படங்கள் போன்றன காட்டப்படும். இப்படங்களை இயக்கியவர்களோடு கலந்துரையாடும் வாய்ப்பும் அப்போது நமக்குக் கிடைக்கும். சிங்களக் கலைஞர்களின் பெருமைமிகு திரைப்படங்கள், குறும்படங்கள், கலைப் படங்களும் அவுஸ்திரேலியர்கள் மத்தியில் பெரு வரவேற்பினை



யும் ஆதரவினையும் பெறுவன.

ஆங்காங்கே அரச நிறுவனங்களும் கடைவிரித்திருக்கக் காணலாகும். அவர்களும் தம் நிறுவனம் சார்ந்த இலவச அன்பளிப்புப் பொருட்களையும் தகவல் தாள்களையும் வழங்கி தம் நிறுவனத்தின் சேவைகள் பற்றி நம்மோடு கலந்துரையாடுவார்கள். தீயணைப்புப் படையினர், காவல்துறையினர், அம்புலன்ஸ் படையினர், வங்கிகள், சுற்றுலாத் துறையினர், விமானப் போக்குவரத்து ஒழுங் கமைப்பாளர்கள் போன்றோர் அவர்களில் சிலர்.

கலைப்பொருள், கைவினைப் பொருள்கள், அலங்காரப் பொருட்களின் விற்பனை ஒருபுறத்தில் நடக்கும். தேனீர், கோப்பி, குளிர்பான, ஐஸ்கிறீம் விற்பனைகள் ஒருபுறம் நடக்கும். உணவுப் பொருள் விற்பனைகள் ஒரு பக்கம் நடக்கும். சிறுவர்கள் விளையாட விளையாட்டுகள் கேளிக்கை நிகழ்ச்சிகள், வாகன சவாரிகள், குதிரை ஒட்டக சவாரிகள், ஆகியனவும் நடக்கும். இப்படி காலையில் இருந்து இரவுவரை மாறிமாறி மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சிகள் நடந்தபடி இருக்கும்.

அப்படியென்றால் எது எங்கு நடக்கிறது என்று எப்ப டித் தெரியும் என்று கேட்கிறீர்களா? இவை எல்லாவற் றுக்கும் பின்னால் மாதக்கணக்காக இதனை ஏற்பாடு செய்து நடத்தும் அரச ஏற்பாட்டாளர்கள் இருக்கிறார்கள். இவர் கள் வெளிநாடுகளில் இருந்து வந்து கலந்துகொள்ளும் கலைஞர்களின் தங்குமிடம், போக்குவரத்து, உணவு சௌ கரிகங்கள் எல்லாவற்றையும் சிறப்பாகக் கவனித்துக் கொள்கிறார்கள். கலைஞர்களை இந்நிகழ்ச்சிக்கு தயார் படுத்தும் அடிப்படை ஏற்பாடுகளை மாத்திரமன்றி அவர் களுக்கு அவுஸ்திரேலியாவின் முக்கியமான இடங்களை யும் அழைத்துச் சென்று காட்டி இந் நாட்டின் விருந்தினர் களாக அவர்களை கவனித்துக் கொள்கிறார்கள். அவர்க ளில் இன்னொரு குழுவினர் நிகழ்ச்சி நிரலையும் முன் கூட்டியே அச்சிட்டு வைத்துக் கொள்வார்கள். நிகழ்ச்சிக் குப் போகிறவர்கள் முன்புறத்தில் அமைந்திருக்கும் அவர்களுடய கூடாரத்துக்குச் சென்று நிகழ்ச்சி நிரலை வாங்கிப் பார்த்து விருப்பமான நிகழ்ச்சிக்குப் போகலாம். யாரும் எப்போதும் எந்த நிகழ்ச்சிக்கு வேண்டுமானாலும் போகலாம் வரலாம். சௌகரிகமாக நாள் முழுக்க இருந்து நிகழ்ச்சிகளை கண்டு அனுபவித்து வரலாம். எல்லாம்




முழுக்க முழுக்க இலவசம்.ஆனால் இவ்வருடமும் கடந்த இரண்டு வருடங்களும் கொரோனா பேரிடர் காரணமாக நிகழ்ச்சிகள் எதுவும் நடக்கவில்லை.

இவ்வருடத்துக்குப் பிறகு மீண்டும் பழையபடி களைகட்டத் தொடங்கும் என்று நம்புவோமாக!

இன்று உங்களோடு என் வீட்டுக்கருகில் இருக்கும் பூங்காவில் சில நாட்களின் முன் எடுத்த சில பூக்களின் படங்களை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.

உங்களுக்கு என்ன பூ பிடிக்கும் என்று சொல்கிறீர்களா?

சிட்னியில் இருந்து யசோமாமி



சிறைக்குள்...




தர்மராசா

# அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தனவின் வருகை

இரவு 10 மணியளவில் சிறைச்சாலை ஊழியர் ஒருவர் சிறிய பொதி ஒன்றைக் கொண்டு வந்து நாம் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த கட்டடத்தின் கீழ்ப் பகுதியில் வைத்தார். அதைக் கூரை மீதிருந்த எம்மில் ஒருவர் கண்டுவிட்டார். சிறை அறைகளுக்குள் இருந்த ஏனைய கைதிகள் மாலையிலேயே சிறை அறைகளுக்குள் பூட்டப்பட்டுவிட்டனர். மகேஷ் என்கிற அந்த ஊழியர் சமையலறைப் பகுதியிலிருந்து ஏதாவது பொருள்களைத் திருடிக் கொண்டுவந்து மறைத்திருக்கலாம் என்று பழைய கைதி ஒருவர் கூறினார். "ஏதாவது கெட்ட வேலை எங்களுக்குச் செய்வான் மச்சான்" என்று மற்றொருவர் கூறிவிட்டுப் பொதி மறைக்கப்பட்டதாகக் கூறப்பட்ட இடத்தைக் கூரையில் குப்புறப் படுத்துக்கிடந்து பார்த்தார். "இவன் கைதிகளது கொழும்பிலுள்ள சொந்தக்காரர்களின் வீடுகளுக்குச் சென்று, பணம் வாங்கிப் பெருமளவு காசை மடக்கிவிட்டான். எங்கட பெடியளாலையே அவன் சீவிக்கிறான். 2 ஆயிரமாம் ஆண்டு களுத்துறைச் சிறையில் நடந்த கைதிகளுடனான பிரச்சினையின்போது துவக்கெடுத்து எங்கட பெடியளைச் சுட்டதைக் கண்டேன். அவன் கெட்டவன் என்று முதலில் நினைத்திருந்தேன். சுட்ட பின்புதான் தெரிந்தது அவன் கேடு கெட்டவன் என்று." பொதியை வைத்த சிறை ஊழியர் பற்றி ஒரு கைதி இவ்வாறு கூறினார்.

17.4.2002 அன்று உடல் முழுதும் வலியாக இருந்தது. கூரையிலிருந்து இறங்கி ஏறுவதால் தோள் மூட்டும் வயிறும் கடும் நோவாக இருந்தன. கை, கால்களில் உரஞ்சல் காயங்கள் ஏற்பட்டன. பல தடவைகள் ஏறும்போது திரும்பத் திரும்ப ஒரே இடத்தில் மீண்டும் மீண்டும் உரஞ்சல்கள் ஏற்பட்டுக் காயங்கள் ஏற்பட்டன. அன்றைய தினம் பிற்பகல் நீதியமைச்சிலிருந்து திருமதி தாரா என்பவர் வந்து கைதிகளைச் சந்திக்க விரும்பினார். உணவு தவிர்ப்புப் போராட்டத்தைத் தொடங்கிய 'டி' பிரிவுக் கைதிகள் அவரைச் சந்திக்க விரும்பவில்லை. நீதி அமைச்சர் அல்லது சட்டமா அதிபர் வந்து தங்களைச் சந்திக்கவேண்டும் என்று சொல்லித் தாராவைச் சந்திக்க மறுத்தனர். பின்னர் தாரா நான் இருந்த 'பி' பிரிவுக்கு வந்தார். இதனால் கைதிகள் மத்தியில் குழப்பமான நிலை இருந்தது. 'டி' பிரிவில் இருந்தவர்கள்தான் உணவு




# ஹெப்பிட்டிக்கொல்லாவ தாக்குதல்தாரிகளுக்குப் புலிகள் தண்டனை வழங்கினர்...!

**மொழியாக்கம்**
**கமலநாதன்**

அனுராதபுரம் - ஹெப்பிட்டிக்கொல்லாவப் பகுதியில் பொதுமக்கள் பயணித்த பேருந்து ஒன்றின் மீது விடுதலைப் புலிகளின் அணி ஒன்று கிளைமோர் தாக்குதல் நடத்தியது. 2006ஆம் ஆண்டு ஆடி (ஜூன்) 15 இல் மேற்கொள்ளப்பட்ட அந்தத் தாக்குதல் படையினர் மீது நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தபோதும் (யக்கா வேவ - பேய்க் குளம் பகுதியில்) மக்கள் பயணித்த பேருந்து ஒன்றே தாக்குதலுக்கு உள்ளானது. காலை வேளையில் தாக்குதலுக்குள்ளான அந்தப் பேருந்தில் பாடசாலை மாணவர்கள், மருத்துவமனைக்குச் சென்ற கிராமத்தவர்கள், பிக்குகள், தொழில்களுக்குச் சென்றவர்கள் என 60 பேர் சாவடைந்தார்கள். 68 பேர் காயமடைந்தார்கள்.

சாதாரணமாக ஒரு பேருந்து பயணிக்கக் கூடியவர்களைவிட இரண்டு மடங்கு மக்கள் அந்தப் பேருந்தில் பயணித்திருந்தார்கள். அந்தக் குண்டுவெடிப்பை நடத்திய புலிகளின் அணியில் மரத்தின் மீது ஏறியிருந்து இலக்கை அறிவித்த மகாலிங்கம் முத்துலிங்கம் (இந்திரன்) என்பவர் பின்னர் இலங்கை காவல் துறையால் கைது செய்யப்பட்டார். அனுராதபுரம் சிறப்பு நீதிபதிகள் அமர்வில் அவர் வழங்கிய குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை 'அப்பி நொதன்ன லங்கா இதிகாசே' (எமக்குத் தெரிந்திராத இலங்கைச் சரித்திரம்) என்ற யூரியூப் தளம் வெளியிட்டிருந்தது. அதன் தமிழ் மொழியாக்கமே இது.

மகாலிங்கம் முத்துலிங்கம் ஆகிய நான் திருகோணமலை - கிளிவெட்டிப் பகுதியிலுள்ள தங்கநகர் கிராமத்தில் பிறந்தேன். அங்கு 2ஆம் வகுப்புவரை படித்தேன். அதற்குமேல் படிப்பதற்கு எனது குடும்பச் சூழல் சாதகமாக இருக்கவில்லை. தமிழில் எழுத வாசிக்கத் தெரியாது ஆனால் கையெழுத்து வைக்கத் தெரியும்.

நான் 16 வயதில் எனது ஊரிலிருந்து வெளியேறி யாழ்ப்பாணத்துக்குச் சென்றேன். அங்கு கோப்பாய்ப் பகுதியில் கள் இறக்கும் தொழில் புரிந்தேன். அப்போது கோப்பாய்ப் பகுதியில் கோவில் உண்டியலை உடைத்துக் களவெடுத்ததற்காகவும் சைக்கிள் ஒன்றைத் திருடியதற்காகவும் காவல்துறையினர் என்னைக் கைது செய்தனர். தண்டைனைக்காக அனுராதபுரச் சிறையில் அடைக்கப்பட்டேன். விடுதலையாகிய பின் 2006இல் மாங்குளம் பகுதியில் குடியேறினேன். அங்குள்ள ஒரு பெண்ணைத் திருமணம் செய்தேன். மாங்குளத்தில் வைத்துக் கிருபா

தவிர்ப்புப் போராட்டத்தில் முன்னின்று செயற்பட்டவர்கள். எனவே அவர்கள் அவரைச் சந்திக்க மறுத்த நிலையில் நாம் அவரைச் சந்திப்பது என்பது சங்கடமான நிலையாக இருந்தது.

இந்த விடயத்தில் கைதிகளை வற்புறுத்த முடியாத சூழல் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு இருந்தது. பின்னர் நாம் ஒரு முடிவுக்கு வந்தோம். வந்திருப்பவரைச் சந்திப்பது என்றும் அவருக்கு எவ்வித பதிலும் சொல்வதில்லை என்றும் உரியவர்களை இங்கு வருமாறு அவரிடம் கோரிக்கை விடுவது என்றும் தீர்மானித்துச் சிறைச்சாலையின் முதன்மைக் கதவுக்கு அருகில் போடப்பட்டிருந்த சிறிய கொட்டகைக்குச் சென்றோம்.

'டி' பிரிவில் கூரையில் இருந்தோர் எம்மை அங்கு போக வேண்டாம் என்று கத்தினார்கள். எங்களில் சிலரை 'டி' பிரிவுக்குள் சிறை அதிகாரிகள் அழைத்துச் சென்றார்கள். பின்னர் அவர்களுடன் பேசிக் கூரையில் இருப்பவர்களைத் தவிர ஏனையவர்களை முதன்மைக் கதவருகில் அழைத்து வந்தார்கள். தாரா என்கிற அந்தப் பெண்மணிக்கு எங்களது நிலைப்பாட்டை விளக்கியபோது தான் இதை நீதியமைச்சருக்கு அறிவிப்பார் என்று கூறிவிட்டு வெளியேறினார். அவர் வெளியேறிய சில மணி நேரங்களின் பின்னர் மறுவாழ்வு அமைச்சர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தன, சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த உதவி சொலிசிட்ட ஜெனரல் றியான்சி அரசகுலரத்ன ஆகியோர் சிறைச்சாலைக்கு வருகை தந்தனர். அவர்களுடன் இணைந்து தாராவும் வந்திருந்தார். அதேவேளை மனித உரிமைகள் அமைப்பைச் சேர்ந்த கந்தசாமி, சட்டத்தரணி ரட்ணவேல் ஆகியோரும் வந்திருந்தனர்.

(தொடரும்)

என்பவர் என்னை இயக்கத்தில் சேர்த்தார். எல்லைப் படையில் பணிபுரிந்தேன்.

### கேணல் லலித் சந்திப்பு

எல்லைப் படையில் இருந்த எனக்குப் புளியங்குளத்தில் இருந்த சீரோ வன் முகாமுக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. நான் அங்கு சென்றபோது இயக்கத்தின் கேணல் தரத்திலிருந்த லலித் என்பவர் அந்த முகாமுக்குப் பொறுப்பாக இருந்தார். அவருடன் பெண் போராளிகள் இருவரும் நான்கு ஆண் புலிப் போராளிகளும் இருந்தார்கள். பெண் போராளிகளின் பெயர்கள் தெரியாது. ஆண்களின் பெயர் அரசப்பன், சின்னா, மணிமாறன், தில்லை. எனது இயக்கப்பெயர் இந்திரன்.

கேணல் லலித் தாக்குதல் ஒன்றுக்காக அங்கிருந்தவர்களுடன் என்னையும் சேர்ந்துபோகுமாறு பணித்தார். அது என்ன வகையான தாக்குதல்? எங்கு நடக்கப்போகிறது? போன்ற எந்தத் தகவலும் எனக்குத் தெரியாது. தாக்குதல் நடத்துவதற்காக 2 கிளைமோர்கள், ரி-56 ரக துப்பாக்கிகள், ரொட்டி, சாப்பாடுகள், என்பனவற்றை எடுத்துச் சென்றோம். கேணல் லலித்தின் இடத்திலிருந்து 2 நாள்கள் காட்டுக்குள்ளால் நடந்து சென்றோம். அந்தத் தாக்குதலை எம்முடன் வந்த பெண் போராளிகளே முன்னின்று



வழிநடத்தினார்கள். ஜீ.பி.எஸ் மற்றும் தொலைத் தொடர்புக் கருவிகளை அவர்களே வைத்திருந்தார்கள்.

இரண்டாவது நாள் அதிகாலை 4 மணியளவில் தார் வீதி ஒன்றில் ஏறினோம்.பெண் போராளிகளும் அரசப்பனும் கிளைமோர்களை உரிய இடத்தில் பொருத்திவிட்டு வந்தார்கள். அப்போது விடிந்துகொண்டிருந்தது. அந்தத் தார் வீதி அந்தப் பகுதிகளில் வளைவு நெளிவின்றி நேராக இருந்தது. என்னை ஒரு மரத்தில் ஏறி வீதியில் வரும் படையினரின் வாகனத்தை அவதானிக்கச் சொன்னார்கள். நான் மரத்தில் ஏறிப் பார்த்துக் கொண்டிருந்தேன். விடிந்து காலை 7 மணி ஆகியிருந்தது. பாதையில் வரும் வாகனங்களை நன்கு அவதானிக்க முடிந்தது. மஞ்சள் நிற பஸ் வருவதைக் கண்டு கீழே நின்றவர்களுக்குக் கூறினேன். நான் கூறியதும் பெண் போராளிகள் உசாரானவார்கள். 200 மீற்றர் தூரத்தில் பஸ் வரும்போது வெள்ளை உடை உடுத்திய பொது மக்கள் உள்ளே இருப்பதைக் கண்டேன். கண்டதும் பஸ்சில் பொதுமக்கள் இருக்கிறார்கள் அடிக்கவேண்டாம் என்று கத்தினேன். ஆனால் தயார் நிலையில் நின்ற பெண் போராளி குண்டை வெடிக்க வைத்துவிட்டார்.

### தண்டனை

அதற்குப் பின்னர் என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. நாங்கள் காட்டுக்குள் குதித்து வேகமாக வந்த வழியால் திரும்பினோம். தாக்குதல் முடிந்து 3 நாள்களின் பின்னர் கேணல் லலித்தின் முகாமைச் சென்றடைந்தோம். எமது இலக்குத் தவறி மக்கள் பயணித்த பஸ் தாக்குதலுக்குள்ளானதால் பல மக்கள் இறந்துவிட்டனர் என்று அவர் கோபத்துடன் கூறினார். அவர் கூறிய போதுதான் எமக்கு முழு விவரமும் தெரியவந்தது.

அதன் பின்னர் பெண் புலிகள் இருவரையும் விட்டு விட்டு எங்கள் ஐந்துபேரையும் கடுமையாக அடித்தார்கள். 8 நாள்கள் இரும்புக் கூட்டுக்குள் போட்டு அடைத்தார்கள். அந்தக் கூண்டுக்குள் உடலை அங்குமிங்கும் திருப்ப முடியாதவாறு முட்கம்பிகள் சுற்றப்பட்டிருந்தன. இரவு, பகலாக அந்த இரும்புக் கூட்டுக்குள் நிற்கவேண்டி ஏற்பட்டது. அடித்த வேதனை, இரும்புக் கூட்டுக்குள் நின்ற வேதனை எனக் கடும் தண்டனகளை அனுபவித்தோம்.

அதன் பின்னர் பாலமோட்டைப் பகுதிக்கு அனுப்பப்பட்டேன்.

அங்கு முன்னரங்க நிலைகளில் பங்கர் வெட்டினேன். அங்கிருந்து தப்புவதற்காக

**8 நாள்கள் இரும்புக் கூட்டுக்குள் போட்டு அடைத்தார்கள். அந்தக் கூண்டுக்குள் உடலை அங்குமிங்கும் திருப்ப முடியாதவாறு முட்கம்பிகள் சுற்றப்பட்டிருந்தன**

எனது கால்விரலை நானே துப்பாக்கியால் சுட்டேன். மருத்துவமனைக்கு அனுப்புவார்கள் என்றும் அங்கிருந்து தப்பி ஓடிவிடலாம் என்றும் நினைத்தேன். ஆனால் பொறுப்பாளர் என்னை மருத்துவமனைக்கு அனுப்பாமல் பாலமோட்டையிலேயே மருந்து கட்டி வைத்திருந்தார். 2007இல் அங்கிருந்து தப்பியோடிப் புதுக்குடியிருப்பில் தங்கினேன். 2009 ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதி படையினரின் கட்டுப்பாட்டுக்குள் சென்றபின் சொந்த ஊரான தங்கநகருக்குச் சென்றேன். அங்கு கூலிவேலை செய்தேன். அங்கு வேறோரு பெண்ணைத் திருமணம் செய்தேன். எனக்கும் அவளுக்கும் ஒருதடவை கடும் சண்டை ஏற்பட்டது. அவள் ஆத்திரத்தில் தேவிநுவர காவல்நிலையத்துக்குச் சென்று நான் ஹெப்பிட்டிக்கொல்லாவ பஸ் குண்டுவெடிப்புடன் சம்பந்தப்பட்டவன் என்று அறிவித்து விட்டாள். அதனால் என்னைக் காவல் துறையினர் கைது செய்தனர் - இவ்வாறாக அவரது வாக்குமூலத்தைக் குறிப்பிட்ட யூரியூப் தளம் வெளியிட்டிருந்தது.

# ஏன்...? அப்படி...?

நட்சத்திரா

37



## பூனை குறுக்கறுத்தால் அப சகுணம்...!

ஏதாவதொரு காரியம் நிமித்தம் பயணிக்கும்போது, செல்லும் பாதையைக் குறுக்கறுத்துப் பூனை ஒன்று ஓடிவிட்டால், சகுணம் சரியில்லை என்று சொல்லி, அவ்விடத்தில் சற்றுநேரம் நின்று தாமதித்து, பின்னர் செல்பவர்கள் நம் மத்தியில் அதிகம் பேர் உள்ளனர். பெருந்தெருக்கள், தொடங்கிச் சிறு வீதிகள், ஒழுங்கைகள், ஒற்றையடிப் பாதைகள் எனப் பரவலாக இந்த நடைமுறையை நம்மவர்கள் பேணுகிறார்கள். தாம் சொல்லும் வழியைப் பூனை குறுக்கறுத்தால் ஒரு வித சஞ்சலம் இவர்களைப் பீடித்துவிடுகிறது. தாம் செல்லும் காரியம் நிறைவேறாது என்றும், தமது பயணத்தால் தமக்கு ஆபத்துகள் நேரலாம் என்றும் ஐயப்படுகின்றனர். ஏன் அப்படி...? பூனை குறுக்கால் போனால் பாதிப்புகள் ஏற்படுமா? பூனை குறுக்கறுப்பதைக் கவனத்தில் எடுத்துச் செயற்படவேண்டுமா, இல்லையா...?

பூனைகள் பல்கிப் பெருகிக் கிடக்கின்ற இந்தச் சூழலில் அனைவரும் ஏதோவொரு சந்தர்ப்பத்தில் பூனை குறுக்கறுப்பதை எதிர்கொண்டே ஆகவேண்டிய சூழலை தவிர்க்க முடியாது. அதுமட்டுமல்ல நாய்களைப்போல பூனைகளைக் கட்டி வளர்க்கும் பழக்கம் நம்மவர்களுக்கு இல்லை. இதனால் அவை சுதந்திரமாக உலாவும்போது மனிதர்களைப்போல வீதியில் அவற்றையும் எதிர்கொண்டே ஆகவேண்டியிருக்கிறது.

பூனை குறுக்கால போனால் பார்த்துப் போகவேண்டும்" முன்னோர்கள் சொல்லி வைத்திருப்பதன் பின்னால் பல உண்மைகள் இருக்கின்றன. ஆனால் அந்த உண்மைகள் எல்லாம் பின்தள்ளப்பட்டு மூட நம்பிக்கையின் முழுவடிவமாகப் பூனை குறுக்கால் போவதை அணுகும் விதம் மாறியிருக்கிறது. பூனை என்று முன்னோர்கள் குறிப்பிட்டதன் அர்த்தம் பூனை இனத்துக்கு இணையான புலி, சிறுத்தை, காட்டுப்பூனை எனப் பல மிருக சாதிகளையும் குறிக்கிறது. இந்த மிருகங்கள் முன்னைய காலத்தில் காடுகளிலும் மனித ஆரவாரமற்ற பகுதிகளிலுமே அதிகம் வசித்தன. முன்னைய காலங்களில் இன்றைய பெருந்தெருக்களோ, காப்பெற் மற்றும் தார் வீதிகளோ இருந்ததில்லை. பற்றைக் காடுகள் வழியே மனிதர்கள் நடந்து பழக்கப்படுத்தி வைத்திருக்

கின்ற நடைபாதைகள், ஒற்றையடிப் பாதைகளே அன்றைய காலத்தில் அதிகம் இருந்தன. புலி, சிங்கம் ஆகிய மிருகங்களின் புழக்கம் குறித்த பகுதிகளில் அதிகம் இருந்தது. அவை அதிகம் புழங்கித் திரிகிற பகுதிகளில் மனிதர்கள் ஏற்படுத்தி வைத்திருக்கின்ற நடைபாதைத் தடயங்களைக் காணும்போதும், மனிதர்களின் பாதைத் தடத்தைக் கடந்து செல்லும் போதும் சிறிது நேரம் அவ்விடத்திலும் அவ்விடத்துக்கு அப்பாலுமாகப் போய் நின்று தாமதித்து (சிந்திப்பது போன்று பாசாங்கு செய்து) செல்லும் பழக்கம் இந்த மிருகங்களுக்கு இருந்தது. அதனால்தான் குறித்த வழித்தடங்களில் பயணிக்கும்போது அவதானத்துடன் இருக்கவேண்டும் என்பதை முன்னோர்கள் சொல்லி வைத்தார்கள். இன்று பல ரக ஊர்திகளில், பெரிய தெருக்களில் பயணிக்கும் காலத்திலும் பூனை குறுக்கறுத்தால் சலனப்படும் அளவுக்கு மனிதர்களின் பழக்கதோச மூளை பாழாகியிருக்கிறது. தவிர பூனை குறுக்கால் போனால் எவ்வித தீமையும் கிடையாது. பூனைக்குத் தீமைகளை முன்னுணரும் சக்தி இருப்பதாக எவ்வித கண்டுபிடிப்புகளும் கூடஇல்லை.

---

# மாவீரர் வெற்றிக்கிண்ணத்துக்கான துயிலுமில்லத் துப்புரவுப் போட்டி...!

ரவீந்திரன்

கார்த்திகை தொடங்கியதும் தமிழ் அரசியல்வாதிகள் புற்றீசல்போல புறப்பட்டு மாவீரர் தினத்தைக் கடைப்பிடிக்கத் துடிக்கின்றனர். மண்வெட்டி பிடிக்கத் தெரியாத பலர் பெரிய மண்வெட்டிகளை ஏந்தித் துயிலுமில்லங்களில் வளர்ந்திருக்கும் பற்றைகளை வெட்டுவதுபோல படத்துக்கு முகம் கொடுக்கின்றனர். ஏனைய நாள்களில் அந்த இடத்தைக் கண்டுகொள்ளாத அவர்கள், கார்த்திகையானதும் மட்டும் அங்கு படையெடுக்கின்றனர். முன்பைப்போலன்றி இப்போதெல்லாம் மாவீரர் குடும்பங்கள் அந்த இடத்துக்கு இவர்களுடன் செல்ல விரும்பாததால் தமது ஆதரவாளர்கள் சிலருடன் களமிறங்கி இந்த வேலையில் ஒருவருக்கு மற்றவர் ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டுவருகின்றனர்.

வருடத்துக்கு ஒரு தடவை நடக்கின்ற இவர்களின் இந்தக் கூத்தை சகித்துக்கொள்ள முடியாத மாவீரர் குடும்பங்களும் இருக்கின்றன. இதில் வேடிக்கை என்னவென்றால், மாவீரர்களின் விவரங்களோ, மாவீரர் குடும்பங்களின் பட்டியலோகூட இந்த அரசியல்வாதிகளிடம் இல்லை என்பதுதான்.



### சுடரேற்றும் தகுதியுள்ளவர்கள்

மாவீரர்களை வணங்கவும், சுடரேற்றவும் யாருக்கெல்லாம் உரித்துண்டு என்று பார்த்தால் அது அவர்கள் சார்ந்த குடும்பங்களுக்கு மட்டுமே உண்டு. தற்போது அந்த உரித்தைத் தமிழ் அரசியல்வாதிகள் கையகப்படுத்திவிட்டனர். இதனால் மாவீரர் குடும்பங்கள் அந்த நிகழ்வில் கலந்துகொள்ளாது மெல்ல மெல்லப் பின்னடித்து வருகின்றன. இந்த மாவீரர் குடும்பங்களுக்கும் புலம்பெயர் தமிழர் அமைப்புகளுக்கும் எந்தவித தொடர்புகளும் இல்லை. சுடரேற்றி ஊடகங்களில் படம் காட்டும்தேவையோ, அதன் காணொலிகளைப் புலம்பெயர் அமைப்புகளுக்கு அனுப்ப வேண்டிய தேவையோ அரசியல்வாதிகளைப்போல இந்தக் குடும்பங்களுக்கு இல்லை.

### யாரெல்லாம் சுடரேற்ற முடியும்

மாவீரர் ஆனவர்களின் பெற்றோர், சகோதரர்கள், போரால் அங்கவீனமடைந்தவர்கள், போரால் சிறைவாசம் அனுபவித்தவர்கள் எனத் தமிழீழப் போராட்டத்துடன் சம்பந்தப்பட்டவர்களே மாவீரர்களுக்குச் சுடரேற்றும் தகுதியுள்ளவர்கள் ஆவர். இதைக் கடைப்பிடிக்கும்போது மாவீரர் தினம் நெருங்கும்போதெல்லாம் மலிந்து களமிறங்கி நிற்கும் அரசியல்வாதிகள் அந்த இடத்துக்குச் செல்லவே முடியாது. இதற்காக மாவீரர் குடும்பங்கள்

காலிமுகத்திடலில் நடந்ததுபோன்ற போராட்டம் ஒன்றை முன்னெடுக்கும் முயற்சியை மேற்கொண்டாலும் அது தவறில்லை. புலிகள் அமைப்பிலிருந்த போராளிகளை ஒருவர் கூடத் தப்பவிடாமல் அழிக்க வேண்டும் என்று இந்திய இலங்கை அரசுகளிடம் வேண்டி நின்ற அரசியல் தலைவர்கள் தற்போது மாவீரர்களுக்குச் சுடரேற்ற முண்டியடிக்கிறார்கள். சில அரசியல்வாதிகள் தம்மைப் பிரபாகரன்போல பாசாங்கு செய்து சுடரேற்றிய சம்பவங்களும் நடந்தன. இத்தகைய அரசியவல்வாதிகள் எந்தத் துயிலுமில்லத்தை முதலில் கைப்பற்றிப் புல்லுச் செருக்குவது, துப்புரவு செய்வது என்பதில் போட்டி போடுகிறார்களே தவிர பாதிக்கப்பட்ட மாவீரர் குடும்பங்களுக்கான எவ்வித உதவிகளையும் செய்வதில்லை. தமது உறவுகள் இறந்துபோனால் சவப்பெட்டி வாங்க முடியாமலும், போரால் அங்கவீனமடைந்தவர்கள் மிக மோசமாகவும் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில் அவர்கள் உருவாக்கிய தளத்தில் ஏறி நின்று அரசியல் செய்கிறார்கள்.

போராட்டம் நடந்த காலத்தில் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் வசித்தவர்களும் புலிகளுக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களும் தற்போது சுடரேற்றுவதற்காகத் தங்கள் உயிரையும் கொடுக்கத் தயாராக இருப்பதாக ஊடகங்களில் பேட்டி கொடுக்கிறார்கள். 2009க்கு முன்பான காலப்பகுதியில் இவர்கள் அனைவரும் போராடும் வலுவுள்ளவர்கள் என்ற நிலையிலேயே இருந்தார்கள். ஆனால் களத்தில் இல்லாது கொழும்பிலும் ஏனைய நாடுகளிலும் ஒளித்தோடித் திரிந்தார்கள். இப்போது நாடு அதிரும், புரட்சி வெடிக்கும் எனப் பேசித் திரிகிறார்கள். இதனால் உரித்துடைய மாவீரர் குடும்பங்கள் இந்த விடயத்திலிருந்து ஒதுங்கியிருக்கின்றன. மாவீரர்களுடனும் போராட்டத்துடனும் எவ்வித்திலும் தொடர்புபடாத தமிழ் அரசியல்வாதிகள் இத்தகைய விடயங்களில் இருந்து விலகிக்கொள்ள வேண்டும் என்பதே அதிகமான மாவீரர் குடும்பங்களின் எதிர்பார்ப்பாகும்.



**மாவீரர்களுடனும் போராட்டத்துடனும் எவ்வி தத்திலும் தொடர்புபடாத தமிழ் அரசியல்வாதிகள் இத்தகைய விடயங்களில் இருந்து விலகிக்கொள்ள வேண்டும் என்பதே அதிகமான மாவீரர் குடும்பங்களின் எதிர்பார்ப்பாகும்**



மக்களின் இத்தகைய உணர்ச்சி சார் விடயங்களைக் குறிவைத்தே தமது அரசியலைக் கட்டமைத்திருக்கும் தமிழ் அரசியல்வாதிகள் இதைக் கைவிடுவதற்கு விரும்புவார்களா என்ன?



கதிரேசன் காத்தவராயன்

# அப்ப எப்பதான் சரிவரும்?

அண்டைக்கதிலை மூளாய்க்குப் போக வெளிக்கிட முருகேசர் தானும் வாறனெண்டார். போகவர பேச்சுத் துணைதானே கூட்டிக்கொண்டு போனன். அதிலை சீரணிச் சந்தி கடந்த பிறகு ரண்டு மூண்டு இடங்களிலை றோட்டைப் போடாமலுக்கு விட்டிருந்தாங்கள். ஆபத்துத்தான். ஏனெண்டால் நல்லாக் கிடக்குதெண்டு கவனக் குறைவாய் போறவை குத்துண்ண விழவேண்டியதுதான். 'உங்காலை வலு மோசமாயல்லே கிடந்தது றோட்டு இப்ப எப்பிடியோ?' எண்டார் முருகேசர், ஒரு கிடங்கிலை இறங்கி ஏறேக்குள்ளை.

'என்ன முருகேசு என்னண்டு நல்லாயிருக்கப்போகுது? நாட்டு நடப்பு அப்பிடியல்லே?' எண்டதுக்கு 'ஏனுங் காலை மானிப்பாய் ரவுணுக்கை ஏதோ சமாளிச்சு வைச்சிருக்கிறாங்களல்லே?' எண்டார். என்னவெண்டு கேட்டன். அதுக்கு 'அவங்கள் பிரதேச சபையாக்கும் கிடங்குகளுக்கு தார் கலந்த கல்லுப்போட்டு போகவரப் பறவாயில்லை... கிடங்குகள் மறைஞ்சிட்டுது... நல்லதொரு வேலை செய்திருக்கிறாங்கள்' எண்டார்.

'உண்மையாயோ? கிடங்குகள் இல்லையெண்டால் பறவாயில்லைத்தானே... மழைத் தண்ணியும் நிண்டு அரியண்டப்படுத்தாது...' எண்டபடி சண்டிலிப்பாய்க்குத் திரும்புகிற சந்திக்கு வந்திட்டம். 'உங்கார் கதிரேசு றோட்டுக்கிடக்கிற கிடையைப் பாரனப்பா..' எண்டு கத்தினார் பின்னுக்கிருந்து முருகேசர். றோட்டாலை நடந்துபோன ஒராள் சிரிச்சுது. படு கேவலமாய்க் கிடந்துது றோட்டு.பயமாய்க் கிடந்துது விழுத்திப்போடுமோ எண்டு.

'இஞ்சார் கதிரேசு கிடங்குகளைப் பாத்து ஓட்டப்பா'

*சமையல் சமையல்*



# முருங்கைக் காய் சூப்

முருங்கையைப் பிரம்ம விருட்சம் என்கிறார்கள். அதன் இலை, பூ, பிஞ்சு, காய், விதை, பட்டை, வேர் என அனைத்திலும் அளவற்ற மருத்துவ குணங்கள் உள்ளன. முருங்கை இலையில் உள்ள ஆற்றல்களை, ஊட்டச் சத்துகளை வேறெந்தக் காய் கறி வகைகளிலும் பெற முடியாது. பல காய்கறிகளில் இருந்து கிடைக்கக்கூடியதை முருங்கையிலையில் பன்மடங்கில் பெறக்கூடியதாக இருப்பது அதன் அளவற்ற ஆற்றலுக்கு ஓர் எடுத்துக்காட்டு. ஆனாலும் முருங்கை இலையைவிடவும் முருங்கைக் காயையே நம்மவர்கள் அதிகம் சுவைக்கும் - கறியாக்கும் பழக்கத்தைக் கொண்டிருக்கிறார்கள்.



ஆதலால் இந்த வாரம் முருங்கைக் காயில் சூப் செய்வது எப்படி என்று பார்ப்போம்.

**தேவையான பொருள்கள்**

முருங்கைக்காய் - 2, வெங்காயம் - 2, உருளைக்கிழங்கு - செத்தல் மிளகாய்கள் 3 - அரை கப், வெண்ணெய் - ஒரு தேக்கரண்டி, மிளகுதூள், உப்பு, தேசிப்புளி - ஆகியன தேவைக்கேற்ப.

**எப்படிச் செய்வது...?**

சட்டி ஒன்றில் வெண்ணெயை விட்டுச் சூடாக்குங்கள். அது சூடாகியதும் நறுக்கி வைத்துள்ள முருங்கைக்காயத் துண்டுகள், வெங்காயம், உருளைக்கிழங்கு ஆகியவற்றைப்போட்டு ஒரு சில நிமிடங்கள் வரை வதக்குங்கள். பின்னர் இரண்டு டம்ளர் அளவில் நீர் சேர்த்துக் கொதிக்க விடுங்கள். கொதித்ததும் கலவையை எடுத்து மசியுங்கள். முருங்கைக்காய்த் தோல்களை அப்புறப்படுத்துங்கள். அத்தோடு மிளகுதூள், உப்பு, செத்தல் மிளகாய்களை (சொர சொரப்பாக அரைத்த பதத்தில்) இட்டுக் காரசாரமாக இருக்கிறதா என்று சரி பார்த்துக்கொள்ளுங்கள். உறைப்பு, உப்பு ஆகியனவற்றுக்கு ஏற்ப தேசிப்புளியை அளவாக விட்டு இறக்குங்கள். சூடாக இருக்கும்போதே ருசித்துப் பாருங்கள். முருங்கைக்காய் சூப்பின் சுவையை அறிவீர்கள்.

எண்டார் முருகேசர். 'பாத்தாலுஞ் சரி பாக்காட்டிலுஞ் சரி கிடங்குகளை விலத்த ஏலாதப்பா... இறுக்கமாப் பிடிச்சிரு' எண்டபடி ஒருமாதிரியாய் சந்தையடிக்கு வந்தம். அவடமும் வலு கேவலமாய்த்தான் கிடந்துது. சந்தைப் பக்கமாய் சிலோ பண்ணி நிப்பாட்டினன். முருகேசர் நாரியைப் பிடிச்சபடி புறுபுறுத்துக்கொண்டு இறங்கினார். எங்களைக் கண்டிட்டு சந்தைக்குள்ளாலை வெளிக்கிட்ட சங்கரப்பிள்ளையர் 'என்னப்பா மழை தண்ணி பாக்கிறியளோ?'எண்டுகொண்டு வந்தார்.

'ம்ம்ம்... சங்கரப்பிள்ளையண்ணை றோட்டு எப்பிடியெண்டு பாத்துச்சொல்ல வந்தனாங்கள்' எண்டார் முருகேசர். 'பாக்கிறவையும் இதுக்குள்ளாலைதானே குதிச்சு விழுந்துகொண்டு திரியினம்... அவைக்கு நீ பாத்துச் சொன்னாத்தான் தெரியவருமோ?' எண்டு எரிச்சலோடை சொன்னார் சங்கரப்பிள்ளையர். 'இஞ்சார் அரசாங்கம் மற்றது எங்களாலை தெரிஞ்சு விட்டிருக்கிற பெரியவையின்ரை கந்தோருகள் இந்த றோட்டிலைதானே கிடக்குதுகள்? அவை போகவர வேறையேதாலும் பாதைகள் கிடக்கோ?' எண்டு நான் கேட்டன்.

சிரிச்சார் பாருங்கோ ஒரு சிரிப்பு. பிறகு 'அதுதான் கனபேருக்கு சந்தேகமாக் கிடக்குது... வர்த்தக சங்கம் சந்தைக்காறர் எண்டு குழம்பினாத்தானே உள்ளூர் அரசாங்கக்காறர் கண் திறப்பினம்... றோட்டு இப்பிடிக் கிடக்கிறதாலை எங்களுக்கு வெறும் கஸ்டந்தானே.. நட்டம் அவங்களுக்கல்லே?' எண்டார் எரிச்சலோடை. 'அவங்கள் மட்டுமே பாரப்பா எத்தினை வங்கியள் வரிசைகட்டிக் கிடக்குதெண்டு? அவங்களெண்டாலும் ஏதும் வழி செய்யேலாதோ?' எண்டார் முருகேசர்.

'அவங்களோ? அவங்கள் சனத்திட்டைக் கிடக்கிறதை பிடுங்கிறதிலையில்லோ குறியாய் நிக்கிறாங்கள் ஆசைகாட்டி...' எண்டு சங்கரப்பிள்ளையர் சொல்லிக்கொண்டு நிக்க, சீரீபீ ஒண்டு காப்பெற் றோட்டிலை போற நினைப்பு மாறாமலே பாய்ஞ்சுகொண்டு வந்து பஸ் ஸ்ராண்டுக்கை நுளைஞ்சுது. அதுக்குக் கொஞ்சமும் குறையாத மாதிரி தனியார் பஸ்சும் பறந்துகொண்டு வந்துது. அதுகள் வந்த வரத்திலை எப்பிடியும் அஞ்சாறு பேராவது சேத்தாலை நனைஞ்சிருப்பினம்.

'எட! உந்தக் கடை வாசலுகளிலை பாரனப்பா குளம் மாதிரி தண்ணி நிக்குது.. ஒரு நாலு கடகம் மண்ணைப் போடுறதுக்குக்கூட மூளை வேலை செய்யெல்லைப் பாரன்' எண்டு நான் சொல்ல 'றோட்டைச் சொந்தங்கொண்டாட விரும்பேல்லையாக்கும்... அல்லது உரியவைதான் அதையும் செய்ய வேணுமெண்டு விட்டிட்டாங்களோ? ஆருக்கப்பா தெரியும்?' எண்டார் முருகேசர் வாழைக்குலையோடை தடுமாறிக்கொண்டு போன ஒராளைப் பாத்தபடி.

'அது சரி எங்கை மழைக் குணத்துக்கை?' எண்டு சங்கரப்பிள்ளையர் கேக்க 'மூளாயிலை ஒரு அலுவல்' எண்டு தொடங்க 'அப்பிடியெண்டா நேரகாலத்தோடை நடவுங்கோ... போகப்போக றோட்டு வலு மோசம்... மழையுமெண்டால் நினைச்சும் பாக்கேலாது' எண்டு சங்கரப்பிள்ளையர் அவசரப் படுத்தினார். 'முருகேசு கழண்ட இடுப்பு பூட்டுப் படும் போலை ஏறு' எண்டுகொண்டு வெளிக்கிட்டன்.



# காஃபி வித் காதல்

## ஆறிப்போன கோப்பி!

ஒவ்வொருவரின் விருப்பங்களிலும் விளையாடும் விதி, இறுதியில் ஆச்சரியங்களையும் சேர்த்தே கொடுத்தால் அது 'காஃபி வித் காதல்'. ஜீவா, ஜெய், ஸ்ரீ காந்த், திவ்யதர்ஷினி (டிடி) ஆகியோர் சகோதர, சகோதரிகள். இதில் ஜீவாவிற்கு காதல் தோல்வி ஏற்பட, அவர் வாழ்க்கையில் மற்றொரு காதல் துளிர் விடுகிறது. அதேபோல ஜெய்யும் தான் அறிந்திடாமல் கைவிட்ட காதலை நோக்கி திரும்பி ஓடுகிறார். ஸ்ரீகாந்த்திற்கு திருமணம் நடந்தும் சில போதாமைகளால் வேறொரு உறவை நாடுகிறார். இந்த மூன்று பேர் வாழ்க்கையிலும் விதி புகுந்து விளையாட, இறுதியில் அவரவர் எண்ணங்கள் அவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப நிறைவேறியதா இல்லையா என்பதுதான் 'காஃபி வித் காதல்' படத்தின் திரைக்கதை.

சூடான காஃபி ஒன்றை தொடக்கத்தில் ஆவி பறக்க டேபிளுக்கு அருகில் கொண்டு வந்து வைத்து போல படத்தின் தொடக்கம் கதாபாத்திரங்களின் அறிமுகங்களாக திரையில் விரிந்தது. ஒரு நல்ல திரை விருந்துக்கு பார்வையாளர்கள் தயாராகிக்கொண்டிருக்கும்போது, திரைக்கதையில் தொய்வு தொடங்கியது. அதன் நீட்சி இடைவேளைக்கு முன்பு வரை நீடித்தது. இடையிடையே திணிக்கப்பட்ட பாடல்கள் கூடுதல் அயற்சி.

இடைவேளைக்கு முன்பு வரும் யோகிபாபு - ரெடின் கிங்ஸ்லி காட்சிகள் பார்வையாளர்களுக்கு ஆசுவாசத்தை கொடுத்து இரண்டாம் பாதிக்கு தயார்படுத்தியது. அந்தக் காட்சிகள்தான் உண்மையில் சுந்தர்.சி படத்தை நியாபகப்படுத்தின. இடையிடையே வரும், ''பொம்மை கையில இருக்கும்போது குழந்தைக்கு அருமை

தெரியாது; அத யாராச்சும் கைப்பற்றிட்டா தான் பொம்மையோட அருமை தெரியும்'', ''வாழ்க்கை எல்லாருக்கும் ரெண்டாவது வாய்ப்பு தரும்'', ''எப்பவும் ரெண்டாவது ஆப்ஷன தேர்ந்தெடு; ஏன்னா முதல் ஆப்ஷன் பிடிச்சிருந்தா ரெண்டாவது ஆப்ஷனுக்கு போயிருக்கவே மாட்டியே'' போன்ற வசனங்கள் காட்சிகளுக்கு கனம் சேர்ந்தன.

படத்தில் நிறையக் கதாபாத்திரங்களும், அவர்களின் காதலும், சிக்கலான திரைக்கதையும், அதனுடன் சேர்ந்த நீட்சியும் ஒட்டுமொத்தமாக தொலைக்காட்சித் தொடரை பார்க்கும் அனுபவத்தைக் கொடுக்கிறது. குறிப்பாக, சில கனதியான காட்சிகள்கூட நகைச்சுவையாக்கப்பட்டிருப்பது, அதன் தன்மையை குலைத்துவிடுகிறது. காட்சிகளுக்கான உறுதித்தன்மையில் தடுமாற்றம் இருப்பதை உணர முடிகிறது. படத்தில் பெரிய குடும்பம் இருந்தபோதும் உணர்வுபூர்வமான காட்சிகள் பெயரளவுக்குக்கூட ஒட்டவில்லை.

ஜீவா, ஜெய் ஸ்ரீகாந்த் மூவரும் திரையில் போட்டிப் போட்டுக்கொண்டு



தங்களது நடிப்பை வெளிப்படுத்துகின்றனர். அவரவர் கதாபாத்திரத் தன்மைகளுடன் பொருந்தி, அதற்கான நியாயத்தை சேர்க்க அவர்கள் தவறவில்லை. அம்ரிதா ஐயர், மாளவிகா சர்மா, ரைசா வில்சன், ஐஸ்வர்யா தத்தா, சம்யுக்தா, திவ்யதர்ஷினி என ஏகப்பட்ட நடிகைகள் இருந்தாலும் கதாபாத்திரங்களில் யாரும் பெரிய அளவில் மனதில் தேங்கவில்லை. யோகிபாபு - ரெடின் கிங்ஸ்லி இணையில்கூட மிகச் சில இடங்களிலேயே ரசிக்கவும் சிரிக்கவும் முடிந்தது.

படத்தின் ஆகப் பெரிய பிரச்சினை... எளிதாக கணிக்கக்கூடிய அதன் திரைக்கதை. ஆச்சரியமில்லாத, திருப்பங்கள் ஏற்படுத்தாத திரைக்கதை.

ஜெய், அம்ரிதாவிடம் தன் காதலைச் சொல்ல செல்லும் காட்சியில் யுவன் சங்கர் ராஜாவின் பின்னணி இசை ஈர்க்கும் வகையில் இருந்தது. அதைத்தாண்டி பெரிய அளவில் பாடல்களும், இசையும் கவனம் பெறவில்லை. கிருஷ்ணசாமியின் ஒளிப்பதிவில் கலர்ஃபுல் காட்சிகள் திரையை அழகாக்கியிருக்கின்றன.

மொத்தத்தில் அதிகப்படியான கதாபாத்திரங்களையும், நகைச்சுவைக்கான பெரு வெளி என எல்லாமும் கையில் இருந்தும் தொய்வான, யூகிக்கக்கூடிய திரைக்கதையால் 'காஃபி வித் காதல்' ஆறியிருக்கிறது.



# லவ் டுடே

## அலைபேசிக் காதல் யுகத்தின் ஒரு பரிமாணம்



இன்றைய அலைபேசி யுகத்தில் காதலும் அதன் மீதான நம்பிக்கையும் எப்படியிருக்கிறது என்று சொல்கிற கதைதான் லவ் டுடே திரைப் படம். காதலில் நம்பிக்கைதான் முக்கியம் என்பதை அலைபேசி பரிமாற்றத்தின் வழியே வலியுறுத்துகிறது.

காதலர்களான உத்தமன் பிரதீப் (பிரதீப் ரங்கநாதன்) நிகிதா (இவானா) இருவரும் ஒருவரையொருவர் நன்கு அறிந்து வைத்திருப்பதாக நினைத்துக் காதலித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சூழலில் நிகிதா காதலிப்பது அவரது தந்தை வேணு சாஸ்திரியிடம் (சத்ய ராஜ்) மாட்டிக்கொள்கிறது.

கறாரான அப்பாவான அவர் மகள் மற்றும் அவளது காதலன் இருவரையும் அழைத்துப் பேசுகிறார். இருவரும் அவரவர் திறன்பேசிகளை ஒரு நாளைக்கு மாற்றிக்கொள்ளவேண்டும் என்று நிபந்தனை ஒன்றை விதிக்கிறார். அதன் பின்னரும் இருவருக்கும் ஒருவர் மீது ஒருவர் காதல் இருந்தால் அவர்களைச் சேர்த்து வைக்கிறேன் என்கிறார். சாதி, மதம், குலம் குறித்த எந்தப் பிரச்சினையும் இல்லை, இந்த விடயத்தில் மட்டும் தேறி விடுங்கள் என்கிறார்.

அதன்படி ஒருவர் மற்றொருவர் செல்போனை பயன்படுத்தத் தொடங்க, அதுவரை ஒருவருக்கு மற்றவர் பற்றித் தெரியாத பலவும் வெளிவரத் தொடங்கி பூதமாக வளர்கின்றன. இப்படி திறன்பேசிக்குள் அடங்கிக் கிடக்கும் ஒவ்வொருவரின் அந்தரங்கமும் அடுத்தவருக்குத் தெரிய வருவதன் விளைவு என்ன? இறுதியில் இருவரும் இணைந்தார்களா, இல்லையா? காதலில் நம்பிக்கை எந்த அளவுக்கு முக்கியம் என்பதுதான் படத்தின் திரைக்கதை.

'கோமாளி' படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமான பிரதீப் ரங்கநாதன் இந்தப் படத்தை இயக்கி, நடித்திருக்கிறார். புதுமுக நடிகராக அவரது நடிப்பு எந்த துருத்தலையும் ஏற்படுத்தவில்லை. நடிப்பு கவனிக்க வைப்பதற்கு மேல் இந்தப் பையனுக்கு நடிக்கத் தெரிந்திருக்கிறதே என்று தோன்றவும் வைக்கிறார். நாயகி இவானா தனக்கு கொடுக்கப்பட்ட கதாபாத்திரத்தை பிசிறின்றி நடித்துக் கொடுத்திருக்கிறார்.

வேணு சாஸ்திரி கதாபாத்திரத்தில் சத்யராஜ் தன் பணியைத் திறம்பட ஆற்றியிருக்கிறார். வீணை வாசித்தபடியே பேசுவது, கறாரான தந்தையாகவும், அதேசமயம் எதிலும் நேர்த்தி பார்க்கும் நபராகவும் குறைந்த நேரம் திரையில் தோன்றினாலும் ரசிக்க வைக்கிறார். யோகிபாபு, ராதிகா சரத்குமார், ரவீனா உள்ளிட்டோர் கதாபாத்திரம் கேட்கும் நடிப்பை அள்ளிக் கொடுத்துள்ளனர்.


காதலில் நம்பிக்கைதான் ஆதாரம் என்பதை ஒருவரிக் கதையாகக்கொண்டு, அதனை இக்கால இளைஞர்களுக்கு சொல்ல முனைந்திருக்கிறார் இயக்குநர். படத்தின் முதல் பாதி சுவையூட்டும் விதமான காதல் காட்சிகள், காதல்



பாடல்கள் என தொடங்குகிறது. இந்தக் காட்சிகள் கடந்து திறன்பேசிகள் கைமாறுகையில் திரைக்கதை வேகமெடுக்கிறது.

சில நகைச்சுவைகள் கதையோட்டத்திற்குக் கைகொடுக்கின்றன. இன்ஸ்டாகிராம், டின்டர் போன்ற நவீன இளசுகள் புழங்கும் தளங்களில் நிகழும் அத்துமீறல்கள் சில இடங்களில் நகைச்சுவையாகவும், சில இடங்களில் அயற்சி தரும் விதத்திலும் விவரிக்கப்பட்டுள்ளன. பிரதீப் - நிகிதா காதலை மட்டும் விவரிக்காமல், அதனையொட்டி பயணிக்கும் ரவீனா - யோகிபாபு கதை திரைக்கதை மையக் கருவை ஆணித்தரமாகச் சொல்ல உதவுகின்றது. இடைச்செருகலாக அந்த இணை மூலம் திறன்பேசிக்குள் மறைந்திருக்கும் அந்தரங்கம் என்பது அசிங்கமானவை மட்டுமேயல்ல என்ற கருத்தையும் முன்வைக்கிறார் இயக்குநர்.

இரண்டாம் பாதியில் திரைக்கதையில் தடுமாற்றம் இருப்பதை உணர முடிகிறது. நகைச்சுவை என்ற பெயரில் ஆபாசத்தையும், பழங்குடி மக்களின் உடைகளையும் வைத்து கிண்டலடித்திருப்பது உண்மையில் விமர்சனத்துக்குரியது. படத்தின் இறுதியில் வரும் முகப்புத்தகக் கணக்கிலிருந்து வெளியேறும் யேசனை நவீன யுக காதலை சொல்கிறோம் என்ற திறன்பேசிக் கால இளவல்களுக்குத் தோன்றாமலிருப்பது ஏன் என்ற தர்க்கக் கேள்வி இடிக்கின்றது. படத்தின் திருப்புமுனைக் காட்சிகளில் அதுவும் ஒன்று என்பதால் அதைச் சாதாரணமாகக் கடக்கவும் முடியிவல்லை.



காட்சிகளுக்கான உணர்வுகளை கட்டியெழுப்பியதில் யுவன் சங்கர்



ராஜா தன் பங்கைச் சிறப்பாகச் செய்திருக்கிறார். தினேஷ் புருஷோத்தமன் கமரா கோணங்களில் புதுமை காட்டவில்லை என்றாலும், ஒளிப்பதிவில் நேர்த்தியை பதிவு செய்துள்ளார்.

மொத்தத்தில் வெறும் 2கே கிட்ஸை மையப்படுத்தி, காதலுக்குள் நம்பிக்கை அவசியம் என்பதை வலியுறுத்தும் ‘லவ் டுடே’ நவீன காலக்கட்டத்தை காட்சிப்படுத்தியிருக்கிறது. இருப்பினும் நிறைய பழமைவாத, ஆணாதிக்க கருத்துகளை புகுத்தியிருப்பது நிச்சயம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல.

# பனாரஸ்

## கசங்கிய திரை ஓவியம்

வாழ்க்கையைக் கொண்டாட்டமாக அணுகும் சித்தார்த் (ஜையீத்), செல்வந்தரின் மகன். பெற்றோரை இழந்த தனி (சோனால்) எதையும் எளிதில் நம்பிவிடும் மனம் கொண்டவள். சவாலில் வெல்வதற்காக சித்தார்த் செய்யும் தவறு, ஊரை விட்டு செல்லும் அளவுக்குத் தனியைப் பாதிக்கிறது. தவறை உணரும் சித்தார்த்,அதற்குப் பிராயச் சித்தம் செய்ய தனியைத் தேடி, பனாரஸ் செல்கிறான். அவளைச் சந்தித்தானா? அவள், அவனை மன்னித்தாளா? அங்கே சித்தார்த் உணர்ந்து கொண்டது என்ன என்பது கதை.

"நானொரு காலப் பயணி. எதிர்காலத்தில் இருந்து உன்னைச் சந்திக்க வந்திருக்கிறேன்" என்று கூறி சித்தார்த், தனியை நம்ப வைக்கும் காட்சியுடன் சுவாரசியமாகவே தொடங்குகிறது படம். பனாரஸ் நகரத்துக்குக் கதை நகர்ந்ததும், அங்கே சாம்பு (சுஜய்) என்கிற 'மரண' ஒளிப்படக் கலைஞன் உதவியுடன் சித்தார்த், தனியைக் கண்டுபிடிக்கும் காட்சிகளும், அவளுடனான சந்திப்புகளும், பனாரஸின் ஆன்மிக அழகும் கவிதைபோல் ஈர்க்கின்றன.



ஆனால், இரண்டாம் பாதியில் 'டைம் லூப்' என்கிற கால வளையத்துள் சிக்கும் நாயகன், அதில், எதிர்பாராமல் நடக்கும் நிகழ்வுகளை எப்படிக் கையாள்கிறான் என்பதைச் சித்தரித்ததில் புதுமையோ, புத்திசாலித்தனமோ துளியும் இல்லை. அதைவிடப் பரிதாபம், கால வளையத்துள் நாயகன் எப்படி சிக்குகிறான் என்பதைச் சொல்ல, இயக்குநர் எழுதியிருக்கும் துணைக்






கதாபாத்திரங்களும் பின்னணியும் சுத்தமாக எடுபடவில்லை. முதன்மைக் கதாபாத்திரங்களையும் அவற்றுக்கு இடையிலான மோதல், புரிந்துணர்வு ஆகியவற்றை இளமை துள்ளும் காதலின் பின்னணியில் சுவாரசியமாக எழுதியிருக்கிறார் இயக்குநர் ஜெயதீர்த்தா. அதேபோல், நாயகனின் அப்பா, சாம்பு ஆகிய துணைக் கதாபாத்திரங்களைத் திரைக்கதையின் பலவீனத்தைத் தாங்கும் தூண்கள்போல் படைத்திருக்கிறார். கங்கைக் கரையில் சாம்பு வாழ்க்கை குறித்து பேசும் வசனங்கள் கவர்கின்றன. பாடகி என்கிற குணாதிசயம், ஒரேயொரு காட்சியைத் தவிர கதாநாயகிக்கு வேறு எந்த வகையிலும் உதவவில்லை.

சித்தார்த்தாக நடித்துள்ள ஜையீத் கான், காதல், ஆக்‌ஷன் காட்சிகளில் அறிமுக நடிகர் என்பதைத் தாண்டி படத்தில் நடித்திருக்கிறார். அதற்காகப் பாராட்டலாம். ஆனால், அழுது நடிக்கும் காட்சியில் தோற்றுப் போகிறார். நாயகியாக நடித்துள்ள சோனால் மோண்டோரியா, பாடல் காட்சிகளில் கூடுதல் ஈர்ப்புடன் தோன்றுகிறார்.

கங்கை நதியின் புகழ்பெற்றப் படித்துறைகள், அந்த நகரின் மூலை முடுக்குகள் என எந்தப் பகுதியை கேமரா கடந்து சென்றாலும் அவற்றைப் பேரழகுடன் காட்சிப்படுத்தியிருக்கிறார் ஒளிப்பதிவாளர் அத்வைதா குருமூர்த்தி. காதலில் உருகி, கால வளையத்துள் சிக்கும் கதைக்குச் சிறந்த பாடல்களையும் பொருத்தமான பின்னணி இசையையும் கொடுத்திருக்கிறார் அஜனீஷ் லோக்நாத். பழனிபாரதியின் கவித்துவமான வரிகளில் ‘மாய கங்கா’, ‘இலக்கணக் கவிதை’ ஆகிய பாடல்கள், மொழிமாற்றுப் படம் என்பதை மீறி ஈர்க்கின்றன.

காலப் பயணம் என ஆர்வமூட்டும் வகையில் தொடங்கி, கால வளையம் என நொண்டியடித்து கடைசியில் கசங்கிப் போகிறது ‘பனாரஸ்’ பட்டு.

# 83 எமையறிதல்

ஐயங்கொண்டான் சுவாமிகள்

பல்வேறு சந்தர்ப்பங்களிலும் சூழல்களிலும் வார்த்தைகளைக் கொட்டிவிட்டு தடுமாறுகிற எத்தனையோ பேரைச் சந்தித்துள்ளோம். நாமே அவ் வாறான சிக்கல்களில் மாட்டுப்பட்டும் இருக்கலாம். இவ் வாறான நிலையையே மனத்தோடு சம்மந்தமற்ற பேச்சு எனக் கருதிக்கொண்டிருக்கிறோம். உண்மையில் இது நாவோடு சம்மந்தமற்ற பேச்சேயன்றி வேறில்லை. தன்னி டம் பதுக்கியிருந்தவற்றை மனம் ஒழுங்கற்று வெளியிடுவ தாக வேண்டுமானால் கொள்ளலாம். மனத்தினது கூற்றாகவே அது நோக்கப்படல்வேண்டும். ஆனால் நாம் பழிசுமத்துவது நாக்கின் மீதே.

அது உண்மையில் நிரபராதியே. மனத்தினது வெளிப் பாடே பேச்சு என்பதுதான் உண்மை. வாக்குறுதிகளை அள்ளி வீசுவது, தற்பெருமைபேசுவது, எப்போதும் குறை பேசுவது என எல்லாமே மனம் கொண்டிருக்கிற, தன் மீதே தான் கொண்டுள்ள ஐயத்தினது அல்லது நம் பிக்கை யீனத்தினது வெளிப்பாடேயன்றி வேறில்லை. பிறர் மீதான வசவு தன் மீதான அதீத இயலாமையே. பொய் பேசுதல் என்பது மனத்தினது பேராசையினது வெளிப் பாடேதான்.

மனம் கொண்டிருக்கிற அளவுக்கதிகமான ஆசையா னது அதனது விளைவுகளை எப்படியாயினும் அடைந்து விடத் தவிக்கும்போது உள்ளதை உள்ளபடி பேசுவது தடையாகிவிடுமோ என்கிற அல்லது தாமதமமாக்கிவிடுமோ என்கிற ஐயம் அல்லது அச்சமானது பொய்பேசத் தூண்டி விடுகிறது. சிந்தனைத்திறனற்ற நாக்கு சர்வசாதாரணமாக மனம் சொல்லெனப் பணித்தவற்றை சொல்லிவிடுகிறது. அப்போதிலிருந்து அப்பொய்யை நம்பவைக்க (உண்மை யாக்க எத்தனிப்பதும் அரிதாக நடைபெறுகிறது.) கடின மாக உழைக்க மனம் அவதியுறுகிறது.

அவதியுறுகிற மனம் ஓய்ந்திருக்க, ஆக்கபூர்வமாகச் சிந்திக்க என எதையும் செய்துகொள்ள முடியாது மேலும் அவதியுறத் தொடங்குகிறது. அவதியுறல் நீடிக்கிறது. தனது அமைதியைத் தொலைத்தலைகிறது. நிம்மதி எங்கே கிடைக்கப்போகிறது? தனதான எதிர்பார்ப்பைத்தானே எட்டவிடாது குறுக்கே பெருந்தடையாக நின்றுகொண்டிருக் கிறது. தனது எதிர்பார்ப்பையடைச் சொல்லிய ஒரு பொய்யால் பல பொய்களை உருவாக்கி இறுதியில் உண்மை யென்பதையே மறந்து அங்கலாய்க்கிறது.

உண்மையென்பதுதான் என்ன? என்கிற கேள்வி இப்போது தோன்றுகிறதா? நல்லது. யதார்த்தமற்ற யாவை யும் அதாவது சந்தர்ப்பம் மற்றும் சூழல் பொருத்தமானவை உண்மையாகலாம். அப்படியற்றவையை பொய் என லாம். ஆக யதார்த்தத்திலிருந்து விலகிய எண்ணம், செயல், பேச்சு எல்லாமே பொய்யாகி விடுகின்றன. சூழலைத் தனக் காக மாற்றுவதற்காக எடுக்கும் முயற்சிகளில் ஒன்றாக இருக்கிற பேச்சு இங்கு பேசுபொருளாக இருக்கிறது.

பேசுகிற சொல் முக்கியமானது என்பதை மறந்து போகிற மனம் அது நினைவிற்கு வரும்போதுதான் திடுக்கிட்டு விழிக்க முயல்கிறது. காலம் கடந்தும் அளவு கடந்தும் போய்விடுகிறது. நாவிற்குக் கட்டளையிட்டு பேசப் பணித்த மனது கலங்கிப்போகிறது. கலங்கிய மனது தெளி வடைவதற்குப் பதிலாக மேலும் கலங்கிப்போகிறது என் பதே யதார்த்தமானது. உணரத் தவறிவிடுகிறோம்.

பேச்சு ஒருபுறமாக சிக்கலாக செயல் மறுபுறத்தால் தொல்லை தருகிறது. முன்னர் பேசிக்கொண்டதைப் போலவே செயலானது திட்டமிடலில் தொடங்கி இலக்கை அடைதல் வரையாக மனமே யாவுமாயிருக்கிறது. தனக் கான எதிர்பார்பிற்கு ஏற்றவிதமாக செயலுக்கான முனைப் பைக் காட்டுகிறது. மீண்டும் மீண்டுமாய் ஒரேயிடத்தில் நின்று பேசவேண்டியுள்ளது. செயலை எதிர்பார்ப்பது எந்த மனமோ அதனையே குழப்புவதும் அதே மனம்தான்.

தனது தடுமாற்றத்தால் தனது செயலொழுங்கையே மாற்றியமைத்துவிடுகிறது. எதிர்பார்ப்பு எட்டப்படாது போய்விடும்போது அதே மனம் காரணங்களைக் கற்பித் துக்கொள்கிறது அல்லது ஏற்கனவே தன்னுள் அடைந்து கிடக்கிற கற்பிதங்களைப் பயன்படுத்திக்கொள்கிறது. அவை நம்பிக்கைகள் என்கிற அடையாளமிடப்பட்ட நம்பிக்கை யீனங்களே என்பதை முன்னர் பல தடவைகள் பேசியி ருக்கிறோமல்லவா?

இவ்வாறான சூழலில் தன்னைப் பற்றிய கருத்துருவச் சிதைவுபற்றி அதிகம் கவனம் செலுத்துவதன் ஒரு விளைவே பேச்சாக வெளியாகிறது. அதே பேச்சுதான் செயலினது நேர்த்தியையும் பாதிப்பிற்குள்ளாக்குகிறது. செயலினது தவறை பேச்சால் சீராக்கம் செய்கிறதாக ஒருவிதமான (தற் காலிக) அமைதியை மனம் அடைகிறது. அவ்வளவுதான் நடக்கிறது. அந்த அமைதியில் ஐயமெழுகிறது.

நான் செய்தது சரியா? பிறர் என்ன நினைப்பார்கள்? போன்ற வினாக்கள் எழுவது தவிர்க்க முடியாததாகிறது. காதில் கேட்டவை, கண்களில் பட்டவை என யாவுமே மனத்தைத் தாவச்செய்கின்றன. அவற்றை இயக்குவ தும்கூட மனம்தான். கண்களில் பட்டவை பட்டவையாகவே இருந்துவிட மனமே தடுத்து அடுத்த விடயத்தை நோக் கித் தாவச்செய்கிறது. தாவும் கண்கள் என்ன செய்கின்றன. சிந்திப்போம்.

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.11.2022 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781